08th JULY 2024

www.uthayam.lk

# உதயம்

சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்

உதயம்: 01 | இதழ்: 38 | பக்கங்கள் - 13 | editor.uthayam@gmail.com

# ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள்



## எதிர் மனுக்கள் தள்ளுபடி; உச்ச நீதிமன்றம் அதிரடி

தற்போதைய ஜனாதிபதியின் பதவி காலம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனுவை இன்று காலை முதல் விசாரித்த உயர்நீதிமன்றம் அது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தள்ளுபடி செய்தது.

இந்த மனுக்களை பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் நீதியரசர்களான விஜித் மலல்கொட, முர்து

03ம் பக்கம்பார்க்க...

# சமாதானம் நல்லிணக்கத்துக்கான நம்பிக்கை தருகிறது

## முஹர்ரம் வாழ்த்தில் சவூதி தூதுவர்



ஹிஜ்ரி 1446, இஸ்லாமிய புத்தாண்டின் உதயமானது சமாதானம், நல்லிணக்கம் மற்றும் செழிப்புக்கான புதிய நம்பிக்கைகளையும் அபிலாஷைகளையும் எமக்கு அளிக்கின்றது.

இச் சந்தர்ப்பத்தில், இலங்கை மக்களுக்கு

02ம் பக்கம்பார்க்க...

கல்முனை பிரதேச செயலக விவகாரம்:

# பகிரங்க விவாதத்துக்கு வாருங்கள்

## ஆளுனர் செந்திலுக்கு டாக்டர் யூஸுப் அழைப்பு!



கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கு கல்முனை பிரதேச செயலக

02ம் பக்கம்பார்க்க...

# சகல சதிகளும் தோல்வி

## இனி தேர்தலுக்கு தயாராகுங்கள்

### நீதிமன்ற தீர்ப்பின் பின் சஜித் அறைகூவல்



தற்போதைய ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் தேர்தல்களுக்குப் பயந்து அதனை ஒத்திவைப்பதற்கு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டது.இதனடிப்படையில் இறுதியாக பதவிக்காலத்தை அதிகரிப்பதற்கும் நீதித் துறையை நாடியது.என்றாலும் நீதிமன்றம் அதற்கு இடமளிக்கவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

03ம் பக்கம்பார்க்க...

# இந்த ஆண்டில் ஜனாதிபதி தேர்தல்

## சம்பந்தன் இறுதிக் கிரியை நிகழ்வில் ஜனாதிபதி திட்டவட்டம்



மறைந்த ஆர். சம்பந்தன் தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மாத்திர மன்றி ஒட்டுமொத்த இலங்கை மக்களின் உரிமைகளுக்காகவும் முன் நின்ற தலைவர் என்றும்

11 ம் பக்கம்பார்க்க...

# வட் வரியை அதிகரித்தால் சம்பள அதிகரிப்பு


## கை விரிக்கும் அரசு

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள அரசு ஊழியர்கள்

03ம் பக்கம்பார்க்க...

# பலவந்த அதிகாரத்துக்கான முஸ்தீபுகளை முறியடிப்போம்

## அனுர குமார சூளுரை



அரசியல் நிலைமாற்ற மொன்றை

04ம் பக்கம்பார்க்க...




அமானா வங்கியில்
வாகன நிதியுதவி

உங்கள் வாகனத்துக்குரிய சாவியை
மிகவும் குறைவான மாதாந்த தவணைக்கொடுப்பனவுகளில் பெற்றுக்கொள்ளுங்கள்

ரூ. 2,085/-
ரூ.100,000க்கு வாடகை*

- மிகக்குறைந்த மாதாந்த தவணைக்கட்டணம்
- 7 ஆண்டுகள் வரையான மீள்செலுத்தும் காலம்
- 24 மணித்தியாலத்திற்குள் அங்கீகாரம்

விண்ணப்பிக்க ஸ்கேன் செய்யவும்

விதிமுறைகளும் நிபந்தனைகளும் பொருந்தும்*

அழையுங்கள் 011 7 756 756 | www.amanabank.lk

இது உங்கள் வங்கி Amãna Bank

அமானா வங்கி (PLC) ஆனது இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் அனுமதி பெற்ற ஒரு வர்த்தக வங்கி ஆகும் | ஃபிச் ரேட்டிங்: RWN (lka) ஸ்திரமான நிலை

## ஜனாதிபதியின்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பெர்ணாண்டோ, பிரித்தீ பத்மன் சூரசேன, எஸ்.துரைராஜா ஆகியோர் ஆராய்ந்தனர்.

முதலில் வியாக்கியானம் கோரி மனு தொழிலதிபர் சி.டி.லெனாவாவினால் தாக்கல் செய்யப்பட்டது.பின்னர் இடையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் திகதி குறித்து உயர் நீதிமன்றம் விளக்கமளிக்கும் வரை தற்போது நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதியில் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதைத் தடுக்கும் வகையில் இடைக்கால உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் முதல் மனுவில் மேலும் கோரப்பட்ட்டிருந்தது.

தேர்தல்கள் ஆணைக்குழு, அதன் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்கள் மற்றும் சட்டமா அதிபர் இதன் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டனர்.இந்த பின்னணியில் உயர்நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு வெளியாகியுள்ளது.

காலை இது தொடர்பான விசாரணை ஆரம்பமான சொலிஸ ிட்டர் ஜெனரல் சார்பில் தனது வாதத்தை முன் வைத்த பிரதி சொலிஸ ிட்டர் ஜெனரல் கனிஷ்க டி சில்வா தற்போதைய அரசியலமைப்பின் படி ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் என்றும் எனவே இந்த மனுக்களை தள்ளுபடி செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

## சகல...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

பிரேமதாச மன்னாரில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

மன்னார் சென் ஜோசப் கல்லூரியில் இன்று (08) இடம்பெற்ற ஸ்மார்ட் வகுப்பறையை திறந்து வைக்கும் நிகழ்வில் மேலும் உரையாற்றிய அவர் உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்தி வைக்க முயன்றார்கள். ஜனாதிபதி தேர்தலிலும் கை வைக்க முயன்றார்கள். நீதிமன்றம் அதற்கும் ஆப்பு வைத்தது.

இப்போது எல்லா சதிகளும் தோற்று விட்டன.இப்போது மக்களுக்கு முன் செல்ல தயாராகுங்கள் என்றும் அவர் அறை கூவல் விடுத்தார்.

இந்த நிகழ்வில் அகல இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷ ாத் பதியுதீனும் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.




## சமாதானம்...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

எனது அன்பான நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன் என இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தனது முஹர்ரம் புது வருட வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## கல்முனை...

**(முன் பக்கத் தொடர்ச்சி)**

விடயத்தில் உள்ள தலையீடு தொடர்பில் பகிரங்க விவாதமொன்றுக்கு வருமாறு சமத்துவத்துக்கான மக்கள் முன்னணியின் தலைவர் டாக்டர் யூஸுப் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடகிழக்கில் முஸ்லிம்களின் உரிமைகளைப் பறித்து இனவாத அரசியலைச் செய்யும் தமிழ் தலைவர்களுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானும் இணைகிறாரா?

கடந்த சில தசாப்தங்களாக வடகிழக்கு முஸ்லிம் பிரதேச செயலகங்களுக்கு என்று பதிவு செய்யப்பட்ட நிலங்களை அபகரிப்பு செய்து தமிழ் பிரதேச செயலகங்களுக்குள் அந்த நிலங்களின் ஆட்சியைக் கொண்டு வருவதற்காக பல தில்லு முல்லு களை வடகிழக்கு தமிழ் அரசியல் தலைவர்கள் செய்தார்கள் என்பது வரலாறு.

1. கோறளைப்பற்று மத்தியிலிருந்து பறித்த காணிகளை மீள இன்னும் ஒப்படைக்காமை

2. கல்முனையில் ஆயுத முனையில் சட்ட விரோதமாக உபபிரதேச செயலகத்தை உருவாக்க முன் கல்முனையில் இருக்கும் 30%, 70% ஆன தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு தலா 29 கிராம சேவகர் பிரிவுகளை திட்டமிட்டே உருவாக்கியமை. 30மூ தமிழ் மக்களுக்கு 29 கிராம சேவகர் பிரிவுகள் வழங்கப் பட்டால் 70% முஸ்லிம்களுக்கு 68 கிராம சேவகர் பிரிவுகள் வழங்கி இருக்க வேண்டும். ஆனால் அவர்களுக்கும் 29 கிராம சேவகர் பிரிவுகளே வழங்கப்பட்டது. ஏன் இந்த அநீதி ஆளுநரே?. இப்போது அதிகாரம் உங்கள் கையில். அநீதியை உங்களுக்கு திருத்த முடியாதா?

3. அம்பாறை மாவட்டத்தில் மொத்த பிரதேச செயலகங்கள் 19ஃ1ஸ்ரீ20 ஆகும். 17மூ ஆன தமிழ் மக்களுக்கு எத்தனை செயலகங்கள் இருக்க வேண்டும் என்று கணக்கு பார்க்கத் தெரியாதவர்களா உங்களிடம் உள்ள அதிகாரிகள்? அதாவது 100/20=5, 17/5= 3.4. ஆக, 3 செயலகங்களுக்கு தகுதி பெறும் தமிழ் சமூகத்திற்கு எப்படி 4+1=5 செயலகம் வந்தது என்று சிந்திக்க முடியவில்லையா? இதுதான் தமிழ் தலைவர்களின் மோசடி, நேர்மையின்மை. இப்போது இப்போது 3 செயல்கள் இருக்க வேண்டிய சமூகத்திற்கு 5 செயல்களைப் பெற்று காணி அபகரிப்பு மட்டும் செய்யாமல் அரசவள ஒதுக்கீடுகளையும் அதிகளவில் பெறுவதற்கு தந்திரம் பண்ணுகிறார்கள். அதற்கு ஆளுநராகிய நீங்கள் சமாதானம் எனும் பெயரில் அவர்களின் மோசடித் திட்டத்திற்கு உதவ வந்திருக்கிறீர்கள், இல்லையா?

4. அம்பாறை மாவட்டத்தில் முதற் பெரும்பான்மையாக 48% வாழும் முஸ்லிம்கள் அரசாங்க அதிபராக வர முடியாது போனாலும் மேலதிக அரசாங்க அதிபராகவாவது வரலாமென்றால் அதையும் 17% தமிழ் தரப்பினருக்கு கொடுத்தது என்ன நியாயமோ ஆளுநரே? உங்கள் அரசாங்கம் தானே ஆட்சியில் இருக்கிறது. நீதி பெற்று கொடுக்க முடியாதா உங்களுக்கு?

5. முஸ்லிம்கள் (85%) பெரும்பான்மையாக வாழும் வடக்கு முசலி பிரதேச செயலகத்திற்கு இன்று வரை ஒரு முஸ்லிம் பிரதேச செயலாளரை நியமிக்க தமிழ் தலைவர்கள் அனுமதிக்கிறார்கள் இல்லையே ஆளுநரே! இது அவர்களின் இனவாத மனநிலைக்கு சான்று பகர வில்லையா ஆளுநரே?

6. இதேபோல் மன்னாரில் பெரும்பான்மை முஸ்லிம்களுக்கு தனி பிரதேச செயலகம் வழங்க தமிழ் தலைவர்கள் தடையாக இருக்கிறார்களே ஆளுநரே!

7. மேலும் அம்பாறையில் காரைதீவு, நாவிதன்வெளி பிரதேச செயலகங்களிலும் 40% ஆனவர்கள் முஸ்லிம்கள். 30% ஆக வாழும் தமிழ் மக்களுக்கு இனரீதியாக பிரதேச செயலகம் கல்முனையில் பிரிக்கப்பட முடியுமானால் ஏன் காரைதீவு நாவிதன்வெளிகளில் வாழும் முஸ்லிம்களுக்கு தனித்தனி பிரதேச செயலகம் பிரிக்கப்பட முடியாது ஆளுநரே?

8. ஆளுநரே இந்த அநீதிகள் வடகிழக்கு தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கு இடையில் சமத்துவமின்மையை ஏற்படுத்தி நிரந்தர பகைமையை உருவாக்குமல்லவா? இதையா நீங்கள் விரும்புகிறீர்கள்? எனவே உண்மைகளை பொது மேடையில் விவாதித்து விட்டு நியாயத்தையும் சமத்துவத்தையும் அதனை அடுத்து பேசுவோமா?






# அகில இலங்கை வை .எம் .எம்.ஏ பேரவையின் புதிய தலைவராக சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் தெரிவு

(பாரா தாஹீர்)

அகில இலங்கை வை. எம். ஏ.பேரவையின் 74 ஆவது ஆண்டு தேசிய மாநாடு கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இஹ்ஸான் ஹமீட் தலைமையில் வெகு விமர்சியாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக துருக்கி உயர்ஸ்தானிகர் செமிஹ் லுட்புடகுத், கௌரவ அதிதியாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தவிசாளர் சட்டத்தரணி எல். தி.பி.தெஹிதெனிய ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இதன் போது நடப்பாண்டுக்கான வை.எம். எம்.ஏ. பேரவையின் 75 ஆவது தேசிய மாநாடுக்கான தலைவராக சட்டத்தரணி அம்ஹர் ஷரீப் தெரிவு செய்யப்பட்டார்.



மாவனல்லை ஹெம்மாதகமயை பிறப்பிடமான கொண்ட இவர் சப்ரகமுவ மாகாணத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட முதலாவது வை.எம்.ஏ.பேரவையின் முதலாவது தேசிய தலைவராவார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரும் சம்பள உயர்வை வழங்கினால், தற்போதுள்ள 18மூ வெட் வரியை 20மூ முதல் 21மூ வரை உயர்த்த நேரிடும் எனவும் பொதுமக்களை நசுக்கி இதுபோன்ற கோரிக்கையை அரசாங்கத்தினால் நிறைவேற்ற முடியாது எனவும் திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தன தெரிவித்தார்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று (08) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய வரவு செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் இவ்வருடம் சம்பள அதிகரிப்பை வழங்க முடியாது என்பதுடன், அரச சேவையில் நிலவும் சம்பள முரண்பாடு குறித்து ஆராய நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் பரிந்துரைகளைக் கருத்திற்கொண்டு 2025ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களின் சம்பளத்தை மீளாய்வு செய்ய எதிர்பார்க்கப்படுவதாக, அரச சேவை தொழிற்சங்கங்கள் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் இன்று (08) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் வலியுறுத்தப்பட்டது.

**மணமகள் தேவை**

அமெரிக்க பிரஜாவுரிமையுடன், அமெரிக்காவில் தொழில்புரிந்து வசித்துவரும் திஹாரிய பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய விவாகரத்து பெற்ற, பிள்ளைகளற்ற ஒருவருக்கு முஸ்லிம் மணமகள் (பிள்ளைகளற்ற) ஒருவர் தேவை. இலங்கை வந்து திருமணம் செய்துவிட்டு மணமகளை அமெரிக்காவிற்கு அழைத்துச் செல்லவுள்ளார்.

மேலதிக தகவல்களுக்கு: 070 239 7210 எனும் வட்ஸ்அப் இலக்கத்தினூடாக தொடர்புகொள்ளவும்.






www.uthayam.lk
உதயம்
சமூகங்களின் இருளகற்றும் தனித்துவக் குரல்
2024 JULY 08 - MONDAY
WEB: www.uthayam.lk
E-mail: editor.uthayam@gmail.com
FB ID: உதயம்

# பொருத்தமான தீர்வை வழங்குவதே சம்பந்தனுக்கு அளிக்கும் கௌரவம்

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்று கொடுப்பதனையே தனது ஒரே இலக்காக கொண்டு பல தசாப்தங்களாக அரசியல் செய்த தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தனின் மறைவு நாட்டின் தேசிய அரசியல் அரங்கில் ஒரு பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது.இலங்கையின் இரண்டாவது சிறுபான்மை எதிர்க்கட்சி தலைவராக பதவிவகித்த சம்பந்தன் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை வென்றெடுப்பதற்காக பெரும் பங்களிப்பு செய்தார்.

தான் மரணிப்பதற்கு முன் சிறுபான்மை மக்களுக்கு அரசியல் தீர்வொன்றை பெற்று கொடுத்து இலங்கைக்குள் சகல இனங்களும் ஒன்றாக வாழ்வதற்கு வழிசமைப்பதற்காகவே அவர் பாடுபட்டார்.நாட்டின் அரசியல் சூழ்நிலை குறிப்பாக கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட பின் அதற்கு சாதகமான சூழ்நிலை உருவமாய் குறித்து தனது இறுதி காலத்தில் பெரும் கவலையுடன் வாழ்ந்த தமிழ் தலைவரான சம்பந்தன் தமிழர் பிரச்சினையை மிக நிதானமாக கையாண்டார்.

தமது மக்களின் பிரச்சினையை சர்வதேசம் வரை எடுத்து சென்று அரசியல் தீர்வொன்றிற்காக பாடுபட்டார். இலங்கை தமிழர்கள், முஸ்லிம்கள், மலையக தமிழர்கள் பெரும்பான்மை சிங்கள மக்களுடன் இணைந்து இலங்கையர் என்று உணரும் அடிப்படையில் சகலரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாக இருந்தவர் சம்பந்தன்.

அதேநேரம் தமிழ், முஸ்லீம் உறவை பேணுவதிலும் அவர் நிதான போக்கையே கடைபிடித்து வந்தார்.முஸ்லிம்களுக்கும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தார். இவர் பெரும்பான்மை சமூகத்திடம் இருந்து பாதுகாப்பை பெற்றுக் கொள்வதற்கு தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்பதனை தொடர்ந்து வலியுறுத்தி வந்தார்.கிழக்கு மாகாண சபையில் முஸ்லீம் முதலமைச்சரை நியமிப்பதற்கு அவர் முழுமையாக ஆதரவை வழங்கினார்.இதனால் இரண்டு முறை கிழக்கு மாகாண சபையில் முஸ்லீம் முதலமைச்சர்கள் நியமனம் பெற்றார்கள்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் ஒருவரே முதலமைச்சராக வர வேண்டுமென சில தமிழ் தரப்பினர் வலியுறுத்திய போது கூட முஸ்லீம் முதலமைச்சர் நியமிக்கப்படுவதற்கு அவர் ஆதரவாக செயற்பட்டார்.தமிழ் சமூகத்தில் ஒரு பிரிவினர் ஆயுத போராட்டம் மூலமே பிரச்சினைக்கு தீர்வு பெற முடியும் என்ற நிலைப்பாட்டுக்கு சம்பந்தன் ஐயா ஆதரவு வழங்கவில்லை. சம்பந்தன் ஐயாவின் மறைவு குறித்து பெரும்பான்மையின தலைவர்கள் ,முக்கியஸ்தர்கள் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் அவரது பணி ,சிந்தனை பற்றி தெளிவாக குறிப்பிட்டுள்ளனர்.

தேர்தல் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்ப்ரிய தனது முகநூல் ஊடக விடுத்துள்ள அனுதாபத் செய்தியில் ஐக்கிய இலங்கைக்குள் உச்ச அதிகார பரவலகத்திற்காக பேசிய உண்மையான அரசியல்வாதி திரு.இராஜவரோதயம் சம்பந்தனை பற்றிய நினைவு என்றும் நிலைக்கட்டும் என்று தெரிவித்துள்ளார்.சம்பந்தன் ஐயாவின் மறைவு தமிழ் தரப்பில் பெரும் இடைவெளியையும் வெற்றிடத்தையும் ஏற்படுத்தியுள்ளது. அந்த வெற்றிடத்தை நிரப்பக்கூடிய தகுதியான தலைவர்கள் தமிழ் தரப்பில் மிக மிக அரிதாகவே இருக்கிறார்கள்.

சிங்கள மக்களின் மனநிலை உணர்ந்து பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு சம்பந்தன் ஐயா பல தீர்வுகளை முன்வைத்தார்.துரதிஷ்டவசமாக அரசு தரப்பில் அவருக்கு உரிய பதில் வழங்கப்படவில்லை.தமிழ் அரசியலில் குறிப்பிட்ட வகிபாகத்தை வகித்து வரும் தமிழ் டயஸ்போராவிற்கு கூட தெளிவான செய்தியை தமிழரசு கட்சியின் 14வது மகாநாட்டில் சம்பந்தன் ஐயா வழங்கி இருந்தார்.நாட்டின் நிலைமையை அறிந்தவர்கள் நாட்டில் இருக்கும் தமிழ் அரசியல் தலைவர்களே என்பதனால் அவர்களுக்கு தீர்வொன்றை காண்பதற்கு டயஸ்போரா இடமளிக்க வேணுமென்றும் குறிப்பிட்டிருந்தார்.

நாட்டினதும் தமிழ் மக்கள் நிலையை தெளிவாக புரிந்து கொண்டிருந்த ஒரு தலைவராக தமிழர்களின் போராட்ட அரசியலில் இடம்பெற்ற தவறுகளை சுட்டிக்காட்டி இருந்தார்.யுத்தத்தின் போது அரச படையினர் பக்கத்தில் இடப்பெற்ற தவறுகள் போன்று எமது தரப்பிலும் குற்ற செயல்கள் இடம்பெற்றிருக்கின்றது என்பதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஒரு கட்டத்தில் தெரிவித்திருந்தார்.தூரநோக்குடன் செயற்பட்டு தீர்வொன்றை காண்பதற்கு பாடுபட்ட ஒரு பெரும் தலைவர் சம்பந்தனாவார்.இனப்பிரச்சினைக்கு சகல சமூகங்களுக்கும் பொருத்தமான ஒரு தீர்வை வழங்குவதே சம்பந்தன் ஐயாவின் மிதவாத போக்குக்கு அளிக்கும் கௌரவமாகும்.

## பலவந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ள அண்மித்துள்ள நேரத்திலேயே நாங்கள் இந்த உரையாடலை மேற்கொள்கிறோம். இந்த மாதம் 17 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தலை நடாத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு கிடைக்கின்றது. எனினும் தேர்தல் நடாத்தப்படுமா இல்லையா என்கின்ற ஐயப்பாடு சமூகத்தில் நிலவுகிறது. எமது அரசியலமைப்பின் 19 வது திருத்தம் மூலமாக ஜனாதிபதிக்கு கையளிக்கப்பட்டுள்ள காலம் ஐந்து வருடங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

அரசியல் அமைப்பு பற்றிய பொருள்கோடலை வழங்குகின்ற உயர் நீதிமன்ற நீதியரசர்கள் மேற்படி பதவிக்காலம் ஐந்து வருடங்களென ஊகித்துள்ளனர். அரசியலமைப்பில் இருக்கின்ற சிறிய துவாரங்களை பயன்படுத்திக்கொண்டு விடாப்பிடியாக அதிகாரத்தில் தொங்கிக்கொண்டிருப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறான முயற்சியை மேற்கொண்டு வருபவர் மக்கள் ஆணை மூலமாக அதிகாரத்திற்கு வந்த ஒரு தலைவரல்ல. மக்கள் அவருக்கு பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யக்கூட அதிகாரத்தை கொடுக்கவில்லை. பாராளுமன்றத்தினூடாக பெற்றுக்கொள்கின்ற அதிகாரத்தின் மூலமாக பலவந்தமாக அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து முயற்சிகளையும் தோற்கடிப்போம் என்பதை நாங்கள் உங்கள் முன்னிலையில் உறுதியாகக்கூறுகிறோம்.

இந்தப் பொருளாதார நெருக்கடிக்கான தீர்வாக அமைவது பொருளாதாரத் தீர்வேயன்றி அரசியல் தீர்வுகளல்லவென அவர் கூறினார். எங்களுடைய இந்த நெருக்கடியை தீர்த்துவைக்க ஆரம்பிக்கமுடிவது அரசியல் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க ஆரம்பித்தால் மாத்திரமே என நாங்கள் நம்புகிறோம். எந்தவொரு நாட்டையும் கட்டியெழுப்புவதற்காக மக்கள் ஆணையைக் கொண்ட ஆட்சியொன்று அவசியம். பொருளாதாரம் சீரழிந்துள்ள ஒரு நேரத்தில் அத்தியாவசியமான காரணியாக அமைவது அது சம்பந்தமாக மேற்கொள்ளப்படுகின்ற தீர்வுச் செயற்பாடுகள் கட்டாயமாக மக்களின் ஆணையிலிருந்து பிறப்பதாக அமையவேண்டும். இரண்டாவது விடயம் தான் நெருக்கடிக்கான தீர்வுகளை நெருக்கடியின் சிருஷ்டிக் கர்த்தாக்களால் கண்டுபிடிக்க முடியாதென்பது. பொதுமக்கள் அது தொடர்பில் நம்பிக்கை வைப்பதும் கிடையாது. இந்த நெருக்கடியின் பெரும் பங்கினை வகிப்பது இந்த அரசியல் கலாச்சாரமாகும்.

எமது நாட்டுக்கும் அத்தியாவசியமான பெருந்தொகையான கருத்திட்டங்கள் பின்நோக்கி நகர்ந்துள்ளன. அநாவசியமான கருத்திட்டங்கள் அமுலாக்கப்பட்டு வருகின்றன. உங்கள் திணைக்களத்தினால் விஞ்ஞான ரீதியான அடிப்படையின் பேரில் முன்வைக்கப்படுகின்ற விடயங்களை நிராகரித்து விலங்குகளை இறக்குமதி செய்தார்கள். அத்தியாவசிய கருத்திட்டங்களுக்கு பணத்தை ஒதுக்காமல் வேறுவேறு விடங்களுக்காக பணத்தை ஒதுக்குகிறார்கள். அங்கு இயங்கிவருவது மறைமுகமான அரசியல் கரமாகும். பொருளாதார தீர்வுக்கான பாதையை புதிய அரசியல் கலாச்சாரம் மூலமாக மாத்திரமே உருவாக்க முடியும். அரசியல் கலாச்சாரத்தின் நிலைமாற்றம் பாரியளவில் எமது கைகளிலேயே பொறுப்பளிக்கப்பட்டுள்ளது.

பகிரங்க சேவையும் பகிரங்க ஊழியர்களின் கணிசமான எண்ணிக்கையும் இந்த மறைமுகமான அரசியல் கரத்தினால் கபளீகரம் செய்யப்பட்டுள்ளது. கால்நடை வளங்கள் பற்றி என்னிடமிருப்பது மோப்பமாகும். உங்களிடமிருப்பது அறிவாகும். எந்தவொரு துறையையும் அபிவிருத்தி செய்கையில் அந்த தொழிற்துறையில் ஈடுபட்டுள்ள சிறப்பறிஞர்கள் பொறுப்பினை திட்டவட்டமாக குறிப்பிட்டு செயலாற்றத் தொடங்குவோம். அரசியல்வாதிக்கும் தொழில்வாண்மை யாளருக்குமிடையில் வைத்துக்கொள்ளப்படவேண்டிய வரையறைகளை பிரித்தொதுக்கியிராமையால் பேரழிவுக்கு அது வழிசமைக்கின்றது. கொள்வனவு செய்வதற்கான ஒழுங்கமைந்த நடைமுறையை கடைப்பிடிப்பதன் மூலமாக தொழில்வாண்மையாளர் டெண்டர் சபையில் கொள்வனவுகள் பற்றி தீர்மானிக்கவேண்டியுள்ளது. அரசியல்வாதி தொழில்வாண்மையாளரின் செயற்பொறுப்பினை ஒரு புறம் ஒதுக்கிவைத்துவிட்டு தான் தெரிவு செய்கின்ற ஒருவரிடம் கையளிக்க முயற்சி செய்கிறார். கரிம உரத்தை சீனாவிலிருந்து இறக்குமதி செய்கின்ற தருணத்தில் பாரிய சச்சரவு ஏற்பட்டது. இந்த உரத்தை இலங்கைக்கு இறக்குமதி செய்வதானால் எமது நாட்டில் விரிவடையாத நுண்ணங்கிகள் பிரவேசிப்பதால் எமது நாட்டுக்கு ஆபத்து விளையுமென்று அந்த துறையிலிருந்த விவசாய மற்றும் மண்ணியல் நிபுணர்கள் கூறினார்கள். அரசியல்வாதி ஆராய்ச்சி செய்கின்ற உத்தியோகத்தர்கள் ஒரு இன்ஜெக்ஷன் மூலமாக இவற்றில் நுண்ணங்கிகளை உட்புகுத்தியதாக கூறுகிறார். தமது பணியை முறைப்படி ஈடேற்றிய தொழில்வாண்மையாளர்களுக்கு சமூகத்தின் முன்னிலையில் அச்சுறுத்தலையும் அபகீர்த்தியையும் ஏற்படுத்தினார்கள். அந்த தொழில்வாண்மையாளர்கள் தமது நிலைப்பாட்டினை மாற்றிக்கொள்ளாமல் எமது நாட்டின் சுற்றாடல் முறைமையை பாதுகாப்பதற்காக மேற்கொள்கின்ற முயற்சிகள் தொடர்பில் நாங்கள் நன்றிக்கூற கடமைப்பட்டிருக்கிறோம். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கீழ் இந்த சம்பந்தப்பட்ட விடயத்தை முறைப்படியே பிரித்தொதுக்களுக்கு இலக்காக்குவோம். கால்நடை வளங்கள் பற்றிய அபிவிருத்தித் தொடர்பான திட்டங்களை வகுக்க, அமுலாக்க, வழிகாட்டல்களை வழங்கவேண்டியது அமைச்சரல்ல. அதனை செய்யவேண்டியவர்கள் அது பற்றிய முறைமைச் சார்ந்த கல்வியறிவு பெற்றுள்ள அனுபவம்வாய்ந்த நீங்களேயாவீர்கள்.

ஒரு சிலர் பால் நுகரப்படுகின்ற அளவின்படியே கணிப்பிடுகிறார்கள். அதன்படி நாங்கள் 40% வீதத்தை உற்பத்தி செய்துள்ளதாக கூறுகிறார்கள். அது சரியான கணிப்பீடு அல்ல. எதிர்காலத்தில் நுகரப்படுகின்ற பாலின் அளவு மேலும் குறைவடையும். அதிலிருந்து கோரமுடியாது. பால் உற்பத்தி அதிகரித்துவிட்டதென எம்மால் கூறமுடியாது. நுகரப்படுகின்ற அளவு போதுமானதா என்பதைத்தான் நாங்கள் பார்க்கவேண்டும்.

# மட்/மம/ பூனொச்சிமுனை இக்ற: வித்தியாலய மைதானத்திற்கு இரவுநேர மின்னொளி விளக்குகள் பொருத்தும் பணிகள் பூர்த்தி!

மட்/மம/ பூநொச்சிமுனை இக்றஃ வித்தியாலயத்தின் அதிபர். A B. அப்துல் றசூலின் முயற்சியின் விளைவாக பாடசாலை மைதானத்திற்கு இரவுநேர மின்னொளி விளக்குகள் பொருத்துவதற்காக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஸைத் அலி ஸாஹிர் மௌலானா அவர்களின் இவ்வருடத்திற்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபா 500,000 நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் முன்னெடுக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை மைதானத்தின் அபிவிருத்தியின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்பட்டுள்ள இப்பணியானது, பாடசாலை மாணவர்கள் மற்றும் பிரதேசத்தின் விளையாட்டு கழகங்கள் இரவு நேர விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகளை நடாத்திப் பயன்பெறுவதை நோக்கமாகக் கொண்டு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மின்னொளி விளக்குகள் பொருத்தப்பட்ட இம்மைதானத்தை இரவு நேர விளையாட்டுப் போட்டிகளுக்காக அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வு மிக விரைவில் இடம் பெறுவதற்கான ஏற்பாடுகள் பாடசாலை நிர்வாகத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது..






இர்ஷாத் இமாமுதீன்

# ISBM வழிகாட்டலே எனது வியாபாரத்தின் திருப்பு முனை

## இளம் வர்த்தகர் ரிப்திகார் ஜுனைத்



வெள்ளவத்தையில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் எவர் சுப்பர் எக்ஸ்பிரஸ்

கொழும்பு மாநகரின் பிரபல்ய நகரான வெள்ளவத்தையில் அமைந்திருக்கும் மினி எவர் சுப்பர் (மினிமார்ட்) மற்றும் எவர் சுப்பர் எக்ஸ்பிரஸ் டெலிவரி சென்றர் ஆகிய இரு வியாபார நிலையங்களும் சமயலைறைத் தேவையை நிறைவேற்றும் அனைத்து வகையான பொருட்களையும் (FMCG) வாடிக்கையாளர்களின் பெறுமதிமிக்க கால நேரத்தை சேமிக்கும் வகையில் அவர்களின் காலடிக்கே கொண்டு சேர்க்கின்றன. இலாபத்தினை மட்டுமே இலக்காகக் கொள்ளாமல் வாடிக்கையாளர்களின் நலனை இலக்காகக் கொண்டு இயங்கும் இவ்வியாபார நிறுவனம் மக்கள் மனங்களில் நீங்காத இடத்தை பிடித்து வருகின்றது. இந்நிறுவனத்தின் மகுட வாசகமாக அமைந்திருப்பது ஆரோக்கிய உணவை வழங்குவதால் மகிழ்ச்சியான வாழ்வை ஏற்படுத்துவதாகும் என்பதாகும் (Eversuper is creating to the customers 'nuutrition, health and happiness needs with convenience faster service and authenticity at a reasonable price)

ஜரோப்பிய நாடுகளிலிருந்து கிடைக்கும் ஓடர்கள் முதல் பல பிரபலங்களுடைய ஓடர்கள் மற்றும் பிரபல்யமான நிறுவனங்கள் வழங்கும் ஓடர்கள் என இலங்கை முழுதும் மலிகைப் பொருட்களை (FMCG) விநியோகம் செய்து மிக பரபப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது அந்நிறுவனம்.

இந்நிறுவனத்தின் உரிமையாளராக திகழும் ரிப்திகார் ஜுனைத் தொழிற் சந்தையில் வளர்ந்து வரும் இளம் வர்த்தகராவார். இவரின் இந்த இரு வியாபார நிறுவனங்களின் மூலமும் ஒரு சுபர் மார்க்கட் வழங்கக் கூடிய சேவைகளை தாண்டிய ஒரு தனித்துவ சேவையை வழங்கி வருகிறார். அதேநேரம் பொருட்களை தரம் பார்த்து பெற்றுக்கொள்ளக்கூடிய வசதிகளை ஏற்பாடு செய்திருப்பதுடன் விநியோகிக்கும் பொருட்கள் தகுதி இல்லை எனக் கருதினால் அதனை மீள வழங்கக் கூடிய வசதிகளையும் ஏற்படுத்தி இருக்கிறார். பொருட்களை ஓடர் செய்தவுடன் அதனை காலடியில் உடனடியாக டெலிவரி செய்துவிடுவார்கள். தனது நிறுவனம் வழங்கும் பொருட்கள் குறித்து ரிப்திகார் ஜுனைத் கருத்துக் கூறும்போது தனக்கும் தனது வீட்டுக்கும் எது பிடிக்குமோ அவ்வாறான பொருட்களையே தனது வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதாக தெரிவிக்கிறார். தனது வியாபாரத் துறையில் பல புதுமைகளை செய்துவரும் இவர் பரம்பரை பரம்பரையாக வர்த்தகம் செய்து வரும் ஒரு குடும்த்தைச் சேர்ந்தவரல்ல. தனது முயற்சி நேர்மை மற்றும் அயராத உழைப்பு மூலமாக ஒரு சிறந்த வழிகாட்டலின் மூலம் வியாபாரத் துறையில் முன்னணி வகித்து வருகிறார்..

### வறுமையும் குடும்ப சுமையும்

கண்டி தெல்தோட்ட பல்லேகம என்ற அழகிய குக்கிராமத்தில் ஒரு விவசாயத் தந்தைக்கு ஐந்து சகோதரிகளுடன் குடும்பத்தில் ஒரே ஒரு ஆண் மகனாகப் பிறந்த இவர் தனது தந்தை விவசாயத்தில் தோல்விகளை சந்தித்த தருணங்களிலெல்லாம் தனது தந்தையின் முகம் வாடிப் போவதைக் காண்கின்றபோது குடும்பத்தின் வறுமைச் சுமையை தீர்க்க எப்படி உதவலாமென தரம் ஒன்பதில் கல்வி கற்கும்போதே சிந்திக்க தொடங்கினார்.

க.பொ.த சாதரணதர பரீட்சையில் இறுதிப் பாடத்தை எழுதிய அன்றே தலை நகர் கொழும்புக்கு வெறும் நம்பிக்கைகளை மட்டும் மூலதனமாகக் கொண்டு புறப்பட்டுச் சென்றவர் ஒரு மலிகைக் கடையில் பணிபுரிகிறார். க.பொ.த.சாதரணதர பரீட்சை பெறுபேறுகள் கிடைக்கப் பெற மூன்று மாதங்களின் பின்னர் தனது சொந்த ஊருக்குத் திரும்பி வந்து க.பொ.த உயர் தரத்தில் வர்த்தகத் துறையை தெரிவு செய்து கற்கத் தொடங்குகிறார்.

க.பொ.த உயர்தரத்தில் பரீட்சை எழுதிய கையோடு தனது தாய் மற்றும் சகோதரிகள் சேர்த்து வைதிருந்த மூவாயிரம் ரூபாவோடு மீண்டும் தலைநகர் கொழும்புக்கு சென்று தனது தாய் மாமாவிடம் ஆலோசனை பெற்று மாமாவின் பைசிக்களை உதவியாகப் பெற்று அதன் மூலமாக ஓர் சுவீட் கடையில் மூவாயிரம் ரூபாவிற்கு சுவீட்களை வாங்கி அதனை சிறு கடைகளுக்கு விநியோகிக்கிறார். அதன் மூலம் அவரின் முதல் அன்றைய நாளே மூவாயிரத்து ஐநூறு ரூபாவாக மாறுகிறது. ஆவரின் வியாபாரம் மூலம் கிடைத்த ஐநூறு ரூபா இலாபம் அவரை உட்சாகப்படுத்த தொடர்ந்த ஊக்கத்தோடு அந்த வியாபாரத்தை செய்து எட்டு மாதத்தில் 80,000 இலாபத்தினை பெறுகிறார்.

மிக அர்ப்பணிப்போடு தனது வியாபாரத்தை முன்னெடுத்த ரிப்திகார் ஜுனைத் 80 000 ரூபாவோடு இன்னும் சில தொகைகளை தெரிந்தவர்களிடம் கடனாகப் பெற்று தனது தந்தையின் ஆலோசனையுடன் தனது மைத்துனரையும் இணைத்துக் கெபாண்டு கொழும்பு 10 இல் ஒரு மலிகைக் கடையை ஆரம்பிக்கிறார். பதினாறு வருடங்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்து தனது வியாபாரத்தை முன்கொண்டு செல்லும் வேளை வியாபாரத்தை ஒழுங்கு முறையோடு கற்று நவீன தொழிநுற்ப முறையுடன் அதனை முன்கொண்டு செல்ல விரும்புகிறார்.

### வியாபார சிந்தனையை பட்டை தீட்டிய இன்சைட் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மென்ட் (ISBM)

தனது வியாபாரத் துறையில் பத்தோடு பதினொன்றாக இருக்காதமல் எல்லோரும் திரும்பிப் பார்க்கும் வகையில் தனித்வமாக சாதிக்க வேண்டுமென நினைத்த ரிப்திகார் ஜுனைத் தேடலொன்றை தொடர்கிறார். பல கருத்தரங்குகளுக்கு செல்கிறார். அவருக்கு எதுவமே திருப்த்தியளிக்காத நிலையில் இன்சைட் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மென்ட் (ISBM) பற்றி அறிகிறார். அதனை அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“இன்சைட் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மென்ட் (ISBM) என்ற வயாபாரக் கல்வி நிவைலயம் எனக்கு கிடைத்தது ஒரு பாக்கியமெனக் கருதுகிறேன். நான் தேடிக்கொண்டிருந்த விடயம் அங்கே எனக்குக் கிடைத்தது.எனது வியாபார அறிவுப் பசிக்கு அங்கே தீணி கிடைத்தது.அவர்கள் நடத்திய அத்தனை பாடநெறிகளிலும் கலந்து கொண்டேன்.மூன்று நாள் வதிவிட செயலமர்வு அவர்கள் நடத்துகின்ற டிப்ளோமா (Diploma in Enterpreneurship Devolopment) என்ற பாடநெறி என அந்தனை பாடநெறி , செயலமர்வுகள் அத்தனையையும் பயின்றேன். பல வியாபார வழிகாட்டல்கள் கிடைத்தது மட்டுமல்லாமல் பல முன்னணி வியாபார நிறுவனங்களின் வர்த்தகர்களின் தொடர்பு கிடைத்தமையால் எனது வர்த்தக சிந்தனையில் ஒரு மாற்றமும் முன்னேற்றமும் ஏற்பட்டது. எனக்கு புதிய விடிவும் புதிய வாழ்க்கையும் அங்குதான் கிடைத்தது” என உளமுறுக நன்றிப் பெருக்கோடு சொல்கிறார்.

மேலும் அவர் இதுபற்றி குறிப்பிடும் போது,

“வியாபாரத் துறை தொடர்பான புதிய உலகையும் சிறந்த வழிகாட்டலையும் இன்சைட் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மென்ட் (ISBM) எனக்கு வழங்கியது. பழைய பாரம்பரிய சிந்தனையுடன் முன்னெடுத்த எனது வியாபாரத்தை புதி நவீன நுட்பங்களுடன் முன்னெடுக்க இன்ஷைட் எனக்கு வழிகாட்டியது. இந்த வழிகாட்டல் எனக்கு கிடைக்கவில்லை என்றால் கண்டியில் சாதாரண கிராமமொன்றில் பிறந்த வளர்ந்த ரிப்திகார் தவைநகரில் தலை நிமிர்ந்து வியாபாரத்துறையில் தனியிடத்தை பெற்றிருக்க முடியாது. இன்ஷைட் ஸ்கூல் தந்த வியாபார சிந்தனை இல்லையென்றால் எனது வியாபாரம் இல்லை” என்று சொல்கிறார் ரிப்திகார் ஜுனைத்.

இன்சைட் நிறுவனம் நாடளளாவிய ரீதியில் இருக்கும் பல வியாபாரத் துறை ஆளுமைகளை ஒன்றிணைத்த ILeaders Club இல் மூன்று வருட காலமாக இணைந்து பயணித்ததன் மூலம் இன்னும் தனது வியாபார சிந்தனையை மேம்படுத்துகிறார ரிப்திகார். இதன் மூலம் இவருக்கு பல வியாபார வழிகாட்டலுடன் இலங்கையின் பல முதற்தர வர்த்தகர்களோடு இணைந்து வியாபார துறையின் புதிய அத்தியாயத்தை புரட்டத் தொடங்குகிறார். இங்கே பல அனுபவப் பகிர்வுகள், நாடளாவிய ரீதியான வர்த்த வலையமைப்பு, முதற்தர வர்த்தகர்களின் நட்பு மற்றும் சகோதரத்துவமென புதியதொரு உலகத்தை அவர் தரிசிக்கத்தொடங்குகிறார். அதேநேரம் இன்சைட் வழங்கிய Diploma பாடநெறியில் அவர் செயல் திட்டமாக முன்வைத்த புதிய கருப்பொருளே அவரின் வெள்ளவத்தையில் அமைந்திருக்கும்ட பிரபல எவர் சுபர் எக்ஸ்பிரஸ் எனும் டெலிவரி சென்றர் ஆகும். இதன் மூலமாக நாடளாவிய ரீதியில் தனது வியாபார சேவையை வழங்கத் திட்டமிட்டிருக்கிறார்.

அதேநேரம் இன்சைட் பிஸனஸ் ஸ்கூலின் தலைவர் இஹ்ஸான் வாஹிட் நடத்திய persona development planning என்ற தலைமைத்துவ பாடநெறி இவரின் வர்த்தக வாழ்வில் ஒரு திருப்பு முனையையும் புதிய நம்பிக்கைகளையும் வழங்கியதாகவும் தெரிவிக்கிறார்.

### பல மில்லியன்களில் பெரியளவிலான வர்த்தகம்

வெறும் மூவாயிரம் ரூபாவோடு கொழும்பு வந்த ரிப்திகார் ஜுனைத் இன்று பல மில்லியன்களுக்கு மேலான தொகை முதலீடு செய்து பல முதலீட்டாளர்கள் முன் வந்து நம்பிக்கையோடு முதலீடு செய்கிற ஒரு பெரியளவிளான வர்த்தகத்தை முன்னெடுத்து வருகிறார்.

ஒரு விளக்கின் பணி வெளிச்சம் கொடுப்பது மட்டுமல்ல அது பல விளக்குகளையும் ஏற்றி வைக்க வேண்டும் என்பதைப் போல மலிகைக் கடை (FMCG) வியாபாரத்தில் சறுக்கி விழுந்தவர்களுக்கு கைகொடுத்து வெற்றி பெற்ற வியாபாரிகளாக உருவாக்கிக் கொண்டிருக்கிறார் ரிப்திகார் ஜுனைத். முனைப்போடு வியாபாரத்தை மேற்கொள்ளும் தொழில் முனைவோருக்கு ஆலோசனையும் உட்சாகமும் வழங்குவதை தனது பேரார்வமாகவும் வாடிக்கையாகவும் வைத்திருக்கிறார். இவர் மூலமாக தனது வியாபாரத்தில் வெற்றிப் பயணத்தை மேற்கொள்பவர்களாக பலர் உருவாகியிருக்கின்றனர்.

இவரின் உள்ளத்தின் இன்னுமொரு அழகு என்னவென்றால் இவருடன் ஆரம்பத்திலேயே இருந்து வர்த்தகத்திற்கு ஒத்துழைத்த இரண்டு தொழிலாளர்களை எந்தவித முதலீடுமின்றி அவர்களையும் தனது வியாபார பங்குதாரராக மாற்றியிருக்கிறார். தனது தொழிலாளர்களும் சில மில்லியன்களுக்கு சொந்தக்காரராக மாறியிருப்பது குறித்து அகமகிழ்கிறார் ரிப்திகார் ஜுனைத்.

இது குறித்து அவர் குறிப்பிடும்போது எப்போதுமே பணக்காரர்கள் ஆழும் வர்க்கமாக இருக்கக்கூடாது. நான் எப்போதுமே அடிமைத்துவத்திற்கு எதிரானவன் என்று தனது இயல்பான முகபாவனையுடன் கூறுகிறார்.

### வியாபாரமும் ஒரு சேவையாக!

தனது அடுத்த திட்டமாக தொற்றா நோயிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையிலான பொருட்களை வழங்கும் ஒரு செயற்றிட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் தெரிவித்தார். தனது வியாபாரம் மக்களுக்கான ஒரு சேவையாகவும் இருக்க வேண்டுமென தான் நினைப்பதாகவும் அவர் தெரிவிக்கிறார்.

மனதில் உறுதியும் இறை நம்பிக்கையும் நேர்மையும் அர்ப்பணிப்போடு பயணிக்கும் ஒருவருக்கு சிறந்த வழிகாட்டலும் கிடைக்கும் போது அவர் செல்கிற வழியெல்லாம் வெல்கின்ற வழியே என்பதற்கு இளம் வர்த்தகர் ரிப்திகார் ஜுனைத் ஒரு எடுத்துக்காட்டாகும்.

# ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27ஆவது வருடாந்த மாநாடு

## அதிக வாக்குகளால் என்.எம். அமீன் மீண்டும் தலைவராக தெரிவு; ஸாதிக் ஷிஹான் செயலாளராகவும் தெரிவு

**(அஷ்ரப் ஏ சமத், ஏ.எஸ்.எம். ஜாவிட்)**

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 27ஆவது வருடாந்த மாநாடு எதிர்வரும் 30.06.2024 காலை 09.30 மணிக்கு கொழும்பு 10 தபால் தலைமைக் காரியாலய கேட்போர் கூடத்தில் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெற்றது.

இம்மாநாட்டில் பிரதம அதிதியாக இலங்கைக்கான ஐக்கிய நாடுகளின் வதிவிடப் பிரதிநிதி மார்க்ஸ் அன்றோ ரன்சேவும் கௌரவ அதிதியாக இலங்கை ஈரான் இஸ்லாமிய குடியரசின் தூதுவர் கலாநிதி அலி றீசா டெல்கோஸூம் கலந்துகொண்டனர்.

பிரதம பேச்சாளர்களாக பிரபல எழுத்தாளர் எம்.எல்.ஏ மன்சூர், இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் பொதுச் செயலாளர் முன்னாள் சட்ட சபை உறுப்பினருமான கே.ஏ எம் முஹமட் அபுபக்கர், ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இதன்போது, சன்டே ஐலன்ட் பத்திரிகையின் ஆசிரியர் மெனிக் டி சில்வா வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கி கௌரவிக்கப்படடார்.

இதேவேளை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட ஒலிபரப்பாளர் திருமதி புர்ஹான் பீ இப்திக்கார், வசந்தம் தொலைக்காட்சியின் சிரேஷ்ட செய்தி முகாமையாளர் எம்.சித்தீக் ஹனிபா, பிறை எப்.எம்.வானொழி தலைமையதிகாரி பசீர் அப்துல் கையும், மூத்த ஊடகவியலாளர்களான சுகைப் எம் காசீம், அமீர் ஹூசைன், தென் பிராந்திய ஊடகவியலாளர் எம். எம்.எம் பசீர், உதயம் செய்தி ஆசிரியர் சிராஜ் எம். ஷாஜகான ஆகியோரும் இதன்போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மேலும், இந்நிகழ்வில் போரத்தின் உப தலைவர் ஊடகவியலாளர் றிப்தி அலி தகவல் அறியும் சட்டம் தொடர்பான ஊக்குவிப்புக்காக விசேடமாக கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன், மாநாட்டின் இரண்டாவது அமர்வில் 2024 / 2025 நடப்பாண்டுக்கான புதிய நிர்வாக சபையும் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்பட்டது. அதன் விபரம் வருமாறு;

ஸ்ரீலங்கா முஸ்லீம் மீடியா போரத்தின் தலைவராக என். எம். அமீன் மீண்டும் தெரிவு செய்யப்பட்ட அதேசமயம், பொதுச் செயலாளராக என்.ஏ. எம். ஸாதிக் ஷிஹான் மற்றும் பொருலாளராக கியாஸ் ஏ. புஹாரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இதேவேளை, நிறைவேற்று குழுவிற்கு 15 பேர் வாக்களிப்பு மூலம் உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் விபரம்:

சிஹார் அனீஸ், இர்சாத் ஏ காதர், அஷ்ரப் ஏ சமத், ஷம்ஸ் பாஹிம், எம். ஏ எம்.நிலாம், றிப்தி அலி, எம்.எப் றிபாஸ், சமீஹா ஸபீர், றம்ஸி குத்தூஸ், அதீபா தௌஸீர், பரீட் இக்பால், மௌலவி எஸ்.எம். எம்.முஸ்தபா, ஏ.பீ.எம். அஸ்ஹர், ஜாவித் முனவ்வர் மற்றும் எம்.ஜ. நிஸாமுடீன் ஆகியோர்களே தெரிவு செய்யப்பட்டனர்.





















ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் 2024 / 2025 நடப்பாண்டுக்காக்காக தெரிவாகிய புதிய நிர்வாக சபை

# ஜனாதிபதித் தேர்தல்; அதிகரிக்கும் பதற்றம்



எம்.எஸ். அமீர் ஹுசைன்

அரசியல் அமைப்பின்படி மக்களால் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி ஒருவரின் பதவிக் காலம் 05 வருடங்களா 06 வருடங்களா என்பது தொடர்பாக விளக்கம் அளிப்பதற்காக நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையில் ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழாம் 2024.07.10 ஆம் திகதி கூட இருக்கின்றது. ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் ஐந்து வருடங்களா ஆறு வருடங்களா என்று எழுந்துள்ள அரசியல் அமைப்பு சர்ச்சையை தொடர்ந்தே உயர் நீதிமன்றம் அது தொடர்பாக ஆராய்ந்து விளக்கம் அளிக்க இருக்கின்றது. தொழில் அதிபரான ஐ.தே.க.வின் முன்னால் தேசிய பட்டியலில் இடம்பெற்றிருந்த ஒரு அபேட்சகரான சி.டி. லெனா என்பவர் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவை தொடர்ந்து இந்த சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றது.

இருந்தாலும் ஜனாதிபதியின் பதவிக் காலம் ஆறு அல்ல. ஐந்து வருடங்களாகும் என்றும் லெனாவின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் கோரி பிரதான எதிர்க்கட்சியான சமகி ஜனபலவேகய உட்பட எதிரணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளால் இரண்டு மனுக்கல் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டி ருகின்றது. இந்த மனுக்கல் 2024.07.05 ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்ட வைகளாகும்.

2024.07.06 ஆம் திகதி குறிப்பிட்ட லெனா என்பவரால் உயர் நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. அந்த மனுவில் ஜனாதிபதி ஒருவரின் பதவிக்காலம் குறித்து உயர் நீதிமன்றம் சரியான தீர்ப்பொன்றை வழங்கும் வரையில் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணைக்குழ மேற்கொள்வதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவையும் பிறப்பிக்க வேண்டுமம் என்று அவரது மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது. இந்த விடயம் பொதுமக்கள் ஆர்வத்துடன் சம்பந்தப்படுவதால் அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தம் முறையாக நிறைவேற்றப்படவில்லை என்பதால் தமது அடிப்படை உரிமை மீறப்பட்டிருக்கின்றது என்பதே மனுதாரரது வாதமாகும். இந்த மனு தொடர்பாக ஆராய்வதற்காக நீதியரசர்களான ஜயந்த ஜயசூரிய, பிரீதி பத்மசூரன், விஜித மலல்கொட, முர்து பெயர்ணான்டோ மற்றும் எஸ்.துரைராஜா ஆகிய ஐந்து நீதியரசர்களும் எதிர்வரும் திங்கட் கிழமை கூடி அது தொடர்பாக ஆராய்ந்து விளக்கம் அளிக்க உள்ளனர்.

ஏற்கனவே சில வாரங்களுக்கு முன்னர் ஐ.தே.க. வின் உறுப்பினரான பாலித ரங்க பண்டார ஜனாதிபதிக்கு மேலும் ஒரு வருட காலம் அவகாசம் வழங்கப்பட வேண்டும் அல்லது ஜனாதிபதித் தேர்தலை இரண்டு வருடங்களுக்கு பின்போட வேண்டும் என்று செய்தியாளர் மாநாமொன்றை நடத்தி வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார். அதனைத் தொடர்ந்து நாட்டில் அரசியல் அரங்கில் பாரிய எதிர்ப்பலைகள் உருவாகின. ஆதன் பின்னர் அவரும் தாம் அரசியல் அமைப்பின் ஏற்பாடுகளில் இருக்கின்ற பிரிவொன்றின் அடிப்படையிலே இந்த வேண்டுகோளை விடுத்ததாக அறிவித்தார். தற்போது ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவைத் தொடர்ந்தும் அரசியல் அமைப்பு சர்ச்சைகளும் விமர்சனங்களும் எழுந்துள்ளன. இந்த மனுவும் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவின் வழிநடத்தலில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருக்க அல்லது பின்போடுவதற்காக ஜனாதிபதி செய்லகத்தில் திட்டமிடப்பட்ட ஒரு சூழ்ச்சியாகும் என்று அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டி உள்ளனர்.

ஆனாலும் இது விடயம் தொடர்பாக ஜனாதிபதி செய்லகம் அறிக்கை ஒன்றின் மூலம் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிவித்திருக்கின்றது. ஜனாதிபதியின் பதவிக் காலம் அரசியல் அமைப்பின்படி 05 வருடங்கள் தான். 06 வருடங்கள் அல்ல என்றும் உரிய காலத்தில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பாக தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும் என்றும் அந்த அறிவித்தல் தெரிவிக்கின்றது. அதே நேரம் இம்மாதம் 19 ஆம் திகதியுடன் தேர்தல் ஆணைக்குழுவுக்கு ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்டபாக தீர்மானம் எடுக்கும் அதிகாரம் வருகின்றது. அதன் பின்னர் தாமதிக்காமல் தேர்தலுக்கான நாள் குறித்தல், வேட்புமனுக்களை கோரும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டி இருக்கின்றது. அதுபற்றி தேர்தல் ஆணைக்குழ ஏற்கனவே ஒரு அறிவித்தலையும் செய்திருக்கின்றது.

எவ்வாறானாலும் உயர் நீதிமன்றத்தின் கடமைப் பொறுப்பாக இருப்பது அரசியல் அமைப்பு தொடர்பாக எந்த பிரிவாக இருந்தாலும் பாராளுமன்றத்தால் அல்லது தனி நபராக இருந்தாலும் மனுவொன்றை தாக்கல் செய்து விளக்கம் கேட்டால் அது தொடர்பாக ஆராய்ந்து விளக்கமளிக்க அல்லது தீர்ப்பளிக்க வேண்டிய தாக இருக்கின்றது. அல்லது குறித்த மனு பொருத்தமற்றதாக இருந்தால் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளாமலே அதனை நிராகரிக்கும் அதிகாரமும் இருக்கின்றது. பாராளுமன்றத்தில் விவாதிக்க இருக்கின்ற சட்டமூலங்களாக இருந்தால் அது அரசியல் அமைப்பிற்கு முரணானதா இல்லையா என்பது தொடர்பாக சபாநாயகருக்கு அறிவிக்கின்றது.

அந்த வகையிலே குறித் மனு தொடாட்பாகவும் ஆராய உயர் நீதிமன்றம் ஐந்து நீதியரசர்கள் கொண்ட குழாத்தை நியமித்திருக்கின்றது. உயர் நீதிமன்றத்தில் மனுவை தாக்கல் செய்துள்ள மனுதாரர் அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தம் காரணமாக ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக தெளிவின்மை ஏற்பட்டிருக்கின்றது என்தை சுட்டிக் காட்டி இருக்கின்றார்.

1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியல் அமைப்பின் பிரிவு 30 (2) இன் படி மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி ஆறு வருடங்களுக்கு கொண்டவொரு தவணைக்கு பதவி வகித்தல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றது. இந்த பிரிவுக்கு அரசியல் அமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சி அரசாங்கத்தில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அப்போதைய சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் அதிகார எல்லையை சுருக்குவது தொடர்பாகவும் சில பிரிவுகள் உட்படுத்தப்பட்டு திருத்தம் நிறைவேற்றப்பட்டு இன்றைக்கு ஐந்து வருடங்களுக்கு மேலாகின்றது.

அரசியல் அமைப்பின் பிரிவு இவ்வாறு கூறினாலும் ஏற்கனவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட எந்தவொரு ஜனாதிபதியும் இவ்வளவு நீண்ட ஆறு ஆண்டுகள் ஜனாதிபதியாக பதவியில் இருந்த வரலாறு இல்லை. ஐந்து வருட பதவிக்காலம் நிறைவடையும் போது ஜனாதிபதித் தேர்தலை நடத்தி அடுத்த ஜனாதிபதிக்கு வாய்ப்பளிக்கப் பட்டிருக்கின்றது. ஏற்கனவே ஜே.ஆர்.ஜெயவர்தனா, சந்திரிகா பண்டாரநாயகா குமாரணதுங்கா, மஹிந்த ராஜபக்ஷ பேன்றவர்கள் இரண்டு முறை ஜனாதிபதிகளாக பதவி வகித்தாலும் ஒருவராவது ஆராண்டுகள் பதவியில் இருப்பதற்கு முயற்சி செய்யவில்லை. அதனால் அரசியல் அமைப்பின் இந்த பிரிவு பேசப்படாத அல்லது கவனத்தில் எடுக்கப்படாத ஒரு பிரிவாக இருந்திருக்கின்றது.

மேற்படி ஜனாதிபதியாக இருந்தவர்கள் இவ்வாறு அரசியல் அமைப்பால் ஆராண்டுகள் பதவியில் இருக்கலாம் என்று உரிமையளிக்கப் பட்டிருந்தாலும் ஐந்து வருமடம் பூர்தியடையும் போது மக்கள் மத்தியில் ஜனாதிபதி அல்லது அவர் சார்ந்த அரசியல் கட்சி செல்வாக்கிழக்காமல் இரண்டாவது பதவிக் காலத்தையும் இலக்கு வைத்ததால் ஆராண்டுகள் பற்றி யோசிக்கவில்லை. ஆனாலும் தற்போது ஜனாதிபதியாக இருக்கின்ற ரனில் விக்கிரமசிங்காவுக்கு மேலும் ஒரு வருடம் அல்லது இரண்டு வருடங்களுக்கு பதவியில் இருக்க வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு பிரதான காரணம் ரனில் விக்கிரமசிங்கா மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு ஜனாதிபதி அல்ல.

இவர் அதிஷ்டவசமாக ஜனாதிபதியாகிய ஒருவர். 2022 ஆம் ஆண்டு ஏற்பட்ட அரசியல் நெருக்கடியை சமாளிக்க முடியாமல் அப்போது ஜனாதிபதியாக இருந்த கோதாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு ஓடும் போது பதவியை ரனிலிடம் கைமாறிவிட்டு ஓடினார். கிடைத்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மேலும் ஒரு வருடத்திற்காவது ஜனாதிபதியாக பதவியில் இருக்க வேண்டும் என்பது ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்காவினதும் அவரது ஐ.தே.கட்சியினதும் இலட்சியமாகும். ஆதனால் ஒன்றில் மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கி நாட்டை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுத்தவர் என்ற அடிப்படையிலும் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து அரசாங்கம் சர்வதேசத்திற்கு செலுத்த வேண்டிய 57 பில்லியன் அமெரிக்க டாலர்கள் (கிட்டத்தட்ட இரண்டு இரட்சம் கோடி ரூபாவுக்கு சமமான தொகை) கடனை செலுத்த அவகாசம் பெற்றவர் என்ற அடிப்படையில் மேலும் ஒரு வருடத்திற்கு பதவியில் இருக்க வரம் கேட்பது. அல்லது ஜனாதிபதித் தேர்தலை எப்படியாவது ஒரு வருடத்திற்கு பின்போடுவது போன்ற ஏதாவது உத்திகளை கையாள்வதே தற்போதைய ஆட்சியின் இலக்காக மாறி இருக்கின்றது.

அதன் காரணமாகவே அண்மையில் பாராளுமன்றத்தில் பேசும் நாட்டிற்கு நல்ல செய்தி என்ற அடிப்படையில் தன்னை ஆதரித்தால் நாட்டிற்கு நன்மை ஏற்படும். இல்லாவிட்டால் நாட்டிற்கு நாசம் நடக்கும் என்றார். அதே போன்று 2024.06.30 ஆம் திகதி மாத்தறையில் நடந்த நிகழ்வொன்றில் பேசும் போது எல்லா கட்சிகளுடனும் கலந்துரையாடி ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது தொடர்பாக முடிவு செய்யலாம் என்றார். அதே நேரம் தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாகவும், அரசியல் கட்சிகள் நாட்டு நலனை கருத்தில் கொண்டும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை நிறைவேற்ற இருப்பதாலும் கடன் மீளமைப்பு செய்யப்பட்டு வெளிநாட்டு கடனை மீளச் செலுத்த கால அவகாசம் பெற்றிருப்பதாகவும் அதற்கு இந்த ஆட்சி நீடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி இந்த சந்தர்ப்பத்தில் தேர்தல் ஒன்று அவசியமா என்ற அடிப்படையில் கட்சிகள் சிந்திக்க வேுண்டும் என்ற விடயத்தையும் வலிறுத்தி உள்ளார்.. இவை அனைத்தினதும் பின்புலமாக அமைவது அதிஷ்டவசமாக கிடைத்த பதவியை மேலும் ஐந்து வருடங்களுக்கு பயன்படுத்த முடிந்தால் அது வரப்பிரசாதமாக அமையலாம் என்று கருதுகின்றார்.

ஆனாலும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தினால் அவர் மீண்டும் ஜனாதிபதியாக வரும் வாய்ப்பு இல்லை. அவரது ஐ.தே. கட்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை. ஏற்கனவே பாராளுமன்றத்தில் இருந்தது கடந்த 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கிடைத்த ஒரே ஒரு போனஸ் ஆசனம் மட்டுமே. அந்த ஆசனத்திற்காக அவரது கட்சியின் யாரும் பாராளுமன்றம் போக விரும்பாததால் கட்சியின் தலைவர் என்ற முறையில் ரனில் விக்கிரமசிங்காவே பாராளுமன்றம் சென்றார். ஆனாலும் கட்சிக்கு ஒரு ஆசனம் தான் இருந்தாலும் அதிஷ்டம் அவர் பக்கம் இருந்ததால் மக்கள் அணை கிடைக்காத ஒருவராக காத்திராப் பிரகாரமாக ரனில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியானார். அதன் காரணமாகவே பதவிக்காலம் தொடர்பாக மூலை முடுக்கெல்லாம் தேடி அரசியல் அமைப்பில் எழுத்துப் பிழைகளாவது இருக்கின்றதா என்று பார்த்த இடத்தில் இந்த ஆராண்டுகள் என்ற விடயம் சிக்கி இருக்கின்றது.

இந்த ஆறு வரும் என்ற விடயம் அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்தத்தில் மாற்றம் செய்யப்பட்டு 05 வருடங்களாக குறைக்கப்பட்டன. ஆனாலும் பிரிவு 30 (2) இற்கு செய்யப்பட்ட திருத்தம் உரிய முறையில் செய்யப்படாததால் தெளிவின்மை நிலவுகின்றது. அதனால் விளக்கம் வேண்டும் என்பதோடு இந்த விளக்கத்தை வழங்கும் வரையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதை தடுக்கும் வகையில் இடைக்கால தடை உத்தரவு கோரப்பட்டிருக்கின்றது. ஆனாலும் இவ்விடயம் தொடர்பாக எதிர்க் கட்சியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் கருத்து தெரிவிக்கையில் ஆறு ஆண்டுகள் பதவி வகிக்கலாம் என்ற பிரிவு திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. அதனால் இந்த மனு செல்லுபடியற்றதாகும் என்று தெரிவித்துள்ளனர்.

ஏவ்வாறாயினும் அரசியல் அமைப்போ அல்லது வேறும் சட்டமூலங்களோ பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு அதற்கு சபாநாயகர் கையொப்பம் இட்டால் அது சட்டமாகின்றது. அதன் பின்னர் அந்த விடயம் தொடர்பாக சவாலுக்குட்படுத்த முடியாது. ஏற்கனவே ஒன்லைன் பாதுகாப்பு சட்டமூலம் நிறைவேற்றப்பட வேண்டுமானால் அந்த சட்டமூலத்தில் அரசியல் அமைப்பிற்கு முரண்படும் பல பிரிவுகள் இருந்ததால் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் சர்வஜன வாக்கெடுப்புக்கும் விடப்பட்டே நிறைவேற்றப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வியாக்கியானம் செய்திருந்தது. ஆனால் சட்ட மூலம் நிறைவேற்றப்பட்ட போது உயர் நீதிமன்றத்தின் உத்தரவு மீறுப்பட்டதாகவும் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலம் செல்லுபடியற்றது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளிக்க வேண்டும் என்றும் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட பல கட்சிகள் மனு தாக்கல் செய்தன.

ஆந்த மனு தொடர்பாக கவனம் செலுத்தி உயர் நீதிமன்றம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு சபாநாயகர் கையொப்பம் இட்ட பின்னர் அது சட்டமாக நிறைவேறிவிட்டது. அதனால் இனி எதுவும் செய்ய முடியாது என்று மனுவை விசாரணை செய்யாமலே நிராகரித்துவிட்டது. அதனால் இந்த ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பான மனுவும் அவ்வாறான ஒன்றாக கருத இடமிருக்கின்றது. ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட திருத்தம் ஆகும். சட்டத்துறையும் அரசியல் அமைப்பிற்கான 19 ஆவது திருத்த்தை அங்கீகரித்திருக்கின்றது. அதனால் இந்த மனுவும் அடிப்படை அற்ற ஒன்றாக கருதப்பட்டு நிராகரிக்கப்படும் வாய்ப்பே அதிகம் இருக்கின்றது.

எதுவானாலும் தற்போது ஜனாதிபதித் தேர்தல் சூடு பிடிக்க ஆரம்பித்திருக்கின்றது. ஆனாலும் பொதுஜன பெரமுண அந்த கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை மர்மமாக வைத்துக் கொண்டு அரசியல் பிரசார கூட்டங்களை ஆரம்பித்திருக்கின்றது. இந்நிலையில் ரனில் பக்கம் இருக்கின்ற பொதுஜன பெரமுண ஆதரவு பாராளுமன்ற உறப்பினர்கள், ஶ்ரீ.ல.சு. கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் ரனில் விக்கிரமசிங்கா தான் அடுத்த ஜனாதிபதியாக வரவேண்டும் என்றும் அவருக்காக களத்தில் இறங்கி வாக்கு கேட்கவும் தயாராகி விட்டனர். ஆனாலும் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொதுஜன பெரமுண கட்சி ரனிலை ஜனாதிபதி வேட்பாளராக்க மறுத்து வருகின்றது. அதே நேரம் தற்போதைய நிலையில் சிறந்த ஆளுமையும், ஆட்சி திறனும். ஆளுமையும் கொண்ட ஒருவர் என்ற முறையில் ரனில் விக்கிரமசிங்கா அவருக்கு கிடைத்துள்ள இந்த வாய்ப்பை மேலும் சில காலம் தொடர சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்பார்த்து நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றார். அதனால் ஜனாதிபதித் தேர்தலுக்கு என்ன ஆகுமோ என்ற பதற்ற நிலை வலுவடைந்து வருகின்றது.








நாச்சியாதீவு பர்வீன்

# உன்னத படைப்புகளால் உயர்ந்து நின்ற படைப்பாளி - இலக்கியமாமணி
# அ.ஸ. அப்துஸ்ஸமது

பாவேந்தல் பாலமுனை பாறூக்

ஈழத்து தமிழ் இலக்கியப்பரப்பில் காத்திரமான படைப்பாளியாக, குறிப்பாக -இஸ்லாமிய தமிழ் இலக்கித்துறையின் முன்னோடியாக அறியப்பட்டிருந்தவர் "ஆனா ஸானா" என்று சுருக்கமாக அழைக்கப்பட்ட அ .ஸ. அப்துஸ்ஸமது. ஆய்வுகளின் மூலமாக ஈழத்தில் இஸ்லாமிய இலக்கியத்துறையின் முதல்வராகப் பேராசிரியர் ம.மு உவைஸ் புகழ் பூத்திருந்த போதிலும் சிறுகதை,கவிதை, ஆய்வுக்கட்டுரைகள், பாடநூல்கள் நாவல்கள்,தொகுப்பு நூல்கள், என்பவற்றினூடாக இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துறையில் முன்னிலை அடையாளத்தைப் பெற்றிருந்தவர் "அ.ஸ".

பத்திரிகைகளில் இந்தியச் செல்வாக்கு மிகுந்திருந்த 1950களில் சிறுகதைகள் எழுதத் தொடங்கிய படைப்பாளி அவர்.

அவருடைய முதலாவது சிறுகதை - "நூர்ஜஹான்" தினகரனில் வெளிவந்தது.

"அப்பொழுது நான் செங்கல்பட்டியில் ஒரு ஆபீஸில் தலைமைக் குமாஸ்தாவாக இருந்தேன். நான் தினமும் காலையில் அந்த காலேஜ் வீதியால் தான் செல்வேன்" என்று நூர்ஜஹான் கதை தொடரும்.

"அ.ஸ" அக்கதையில் எழுதியிருந்த கல்முனை, திருகோணமலை,கல்லோயாச் சந்தி என்ற இடங்கள் செங்கல்பட்டு, திருச்சி ஜங்சன், கோயம்புத் தூர் என்று மாற்றப்பட்டதாகவும் போடியார் ..,ஜமீன் தாராகவும் இலிகிதர் குமாஸ்தாவாகவும் மாற்றப்பட்டே கதை பிரசுரிக்கப்பட்ட தாகவும் அவரின் முதல் சிறுகதைபற்றி அ.ஸ . குறிப்பிடுவார்.

அவ்வாறான, அக்கால இந்தியச் செல்வாக்கை, நமது கலாசாரப் பின்ன ணியில் தொடர்ந்து சிறுகதைகள் எழுதியதன் மூலமாக மாற்றி அமைத்தவர் அ.ஸ. அப்துஸமது.அவருடைய "பின்னல் ஊசி " என்ற சிறுகதையை நமது கலாசாரப் பின்னணியில் எழுதி, "எதையும் மாற்றக் கூடாது" என்ற குறிப்போடு அனுப்பி வைத்து வெற்றி கண்டவர் அவர்.

சிறுகதைத் துறைக்கு 1950 களில் அ.ஸ பிரவேசித்தாலும் அவரின் எழுத்துலக வருகை அதற்கும் முந்தியது.

"நான் திடுதிப்பென்று எழுத்துல கிற்கு வந்தவன் அல்லன். 1947 ஆம் ஆண்டு நான் 7ஆம் வகுப்பு படிக்கும் போது பத்திரிகை படிக்கும் பழக்கம் உடையவனாக இருந்தேன். பாடசாலை விட்டு வீட்டுக்கு வந்து சாப்பிட்டதும் பத்திரிகைக் கடைக்குப் போய் ஐந்து சதம் கொடுத்து தினகரன் ஒன்றை வாங்கி வருவேன் .அதனைப் படித்து முடித்து விட்டே மறு வேலைக்குத் திரும்புவேன் .அப்பொழுது ஒவ்வொரு புதனும் தினகரனில் பாலர் பகுதி வெளிவரும் .அதில் வெளிவரும் மாணவர் ஆக்கங்கள் என்னை பெரிதும் ஈர்த்தன.அம் மாணவர்களைப் போல நானும் எழுத வேண்டும் என்று தூண்டப்பட்டேன். என்ன விஷயத்தை பற்றி எழுதலாம் என்று யோசனையில் ஆழ்ந்தேன்.. அது ஒரு மீலாத் விழாக் காலம் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் சேர் ராஸீக் பரீத் தலைமையில் மீலாத் விழா ஒன்று சிறப்பாக நடைபெற்றது .அது என் மனதை பெரிதும் கவர்ந்தது .அதனை வைத்து "எங்கள் ஊரில் திருநபி ஜெயந்தி" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதினேன். எனது முதல் ஆக்கம் தினகரனில் பிரசுரமாகிற்று." என்று தனது எழுத்துலகப் பிரவேசத்தை குறிப்பிடுவார் அவர்.

சிறு வயதிலேயே எழுத்துலகில் பிரகாசித்தவர் "அ.ஸ." அவர் எட்டாம் வகுப்புப் படிக்கின்ற போது எட்டாம் வகுப்புப் பாடநூலில் (பூம் பொழில்) அவர் பத்திரிகைக் கெழுதிய "சீறாப்புராணம்"என்ற கட்டுரை இடம் பெற்றுப் பெருமை சேர்த்தது.

"கட்டுரை ஆசிரியர் அ.ஸ. அப்துஸ்ஸமது" என்று அதில் இடம் பெற்ற வரியே, எழுத்திலும் ஆசிரியர் சேவையிலும் தனக்கு ஆர்வம் மேலிடக் காரணமாக அமைந்ததாகக் குறிப்பிடுவார் "அ.ஸ".

அச்சு வசதிகள் குறைவாக இருந்த அக்காலத்தில் இலக்கிய உலகம் போற்றும் பெறுமதி மிக்க நூல்களைத் தந்தவராக கண்ணியம் பெற்றிருந்தவர் அ.ஸ. அப்துஸ்ஸமது.

**சிறுகதை**

எனக்கு வயது பதின்மூன்று-1977 (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது)

**நாவல்**

பனிமலர் 1982 (வீரகேசரியின் பிரதேச நாவல் போட்டியில் பரிசு பெற்றது) கனவுப் பூக்கள் 1984 (கொழும்பு முஸ்லீம் எழுத்தாளர் பேரவைப் பரிசு பெற்றது) தர்மங்களாகும் தவறுகள்- 1987

**இலக்கியம்**

சீறா இன்பம் 1957 (சென்னை)
சுலைமான் பல்கீஸ் 1959 (சென்னை)
இஸ்லாமிய இலக்கிய நோக்கு 1996

**தொகுப்பு**

*முற்றத்து மல்லிகை-1964*
*(ஈழத்து முஸ்லிம் புலவர் 57பேரின் கவிதை தொகுப்பு நூல்)*
*பிறைப் பூக்கள் 1979 ஈழத்து (முஸ்லிம் எழுத்தாளர் 27 பேரின் சிறுகதைத் தொகுப்பு - நாலாவது இஸ்லாமிய இலக்கிய மாநாட்டு வெளியீடு, கொழும்பு)*

அடுத்த வாரம் தொடரும்...



# நண்பர் முத்துமீரான்

*நண்பர் முத்துமீரான் காலமான செய்தி அதிர்ச்சி அளித்தது.*

*அவருடன் நீண்ட காலமான இலக்கிய உறவு இருந்தது. அந்த உறவின் காரணமாக 2021-ஆண்டு அவரது மனப்பிரசவம் சிறுகதைத் தொகுதியைக் கொடகே வெளியீடாக வெளியிடப் பணி செய்யக் கிடைத்தது.*

*அத்த தொகுதியின் பின்அட்டை குறிப்பாகப் பின் வருமாறு எழுதக் கிடைத்தது*

*ஈழத்தின் முஸ்லிம் தமிழ் மீனவர்களின் வாழ்வியலில் மணம் கமழும் வார்த்தைகளில் அவர்தம் கதை சொல்லும் ஈழத்து கதை சொல்லிகளில் இவர் தனித்துவமானவர். இத்தொகுப்பில் அமைந்துள்ள புனைப்பிரதிகளில் கிழக்கு மண்ணின் முஸ்லிம் தமிழ் மீனவ மக்களின் வாழ்வியலில் மணம் கமழும் வார்த்தைகளால் அவர்தம் கதைகளைச் சொல்லி இருக்கிறார் என்ற வகையில், நண்பர் முத்துமீரானின் இத்தொகுப்பு முக்கியத்துவம் பெறுகிறது.*

*அடுத்து 2020ஆம் ஆண்டு நடந்த 22 வதுகொடகே தேசியச் சாகித்திய விருது விழாவில் நண்பர் முத்துமீரான் அவர்களுக்குக் கொடகே வாழ்நாள் சாதனை விருது கிடைத்த தருணத்தில் அவருடன் இருக்க கிடைத்தது.*

*மரணத்திற்கு விமர்சனம் இல்லை. மரணத்திற்கான காரணம் மட்டும் இருப்பது தவிர்க்க முடியாதது.*

*நண்பரை இழந்து விட்டோம். அவரது பணிகள்தான் சாசுவதமானவை, நண்பர் முத்துமீரான் எம்நினைவுகளில் என்றும் இருப்பார்... இதுவே அவரது இழப்புக்கான நமக்கான ஆறுதல்.*

**மேமன் கவி**



பரீட் இக்பால்

# மலர்ந்தது முஹர்ரம்

துல்ஹஜ் மறைகிறது. முஹர்ரம் மலர்கிறது. அல்லாஹ்வின் அருட்கொடையால் நாம் ஹிஜ்ரி 1445 ஐ கடந்து 1446 இல் காலடி வைக்கிறோம்.

நபி (ஸல்) அவர்கள் அல்லாஹ்வினால் உலகத்திற்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்துகொள்வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பாரிய திருப்புமுனையான ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டே இஸ்லாமிய புதிய வருடம் கணிக்கப்படுகிறது. நபி (ஸல்) அவர்களும் நபித் தோழர்களும் கி.பி. 622 இல் மக்காவிலிருந்து மதீனாவுக்கு புலம்பெயர்ந்தமை ஹிஜ்ரத் என அழைக்கப்படுகிறது.

எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பதை உமர் (ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித்தோழர்களை அழைத்து ஒன்றுசேர்த்து ஆலோசனை கேட்டார்கள். அப்போது பலரும் பல மாதங்களைக் குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபி (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் ஊடாக இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளையும் அத்துமீறல்களையும் மிகைத்து தூய இஸ்லாத்தை வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க்கையை தெரிவு செய்தார்கள். அதற்கான இலட்சியப் பயணமே ஹிஜ்ரத் நிகழ்வாகும். இன்று ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய புத்தாண்டின் போதும் இதனை நினைவுபடுத்தும் நாம் எம் வாழ்வில் எத்தகைய தீய செயல்களை விட்டும் ஒதுங்கி புதிய வாழ்விற்கு எம்மைத் தயார்படுத்தியிருக்கிறோம்?

வருடத்தின் இறுதிக் கட்டத்தில் இருக்கும் நாம் இந்த வருடத்தில் அமைந்த செயற்பாடுகளை ஒரு கணம் மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவை உண்டு. எத்தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்தேன்? பர்ளு தொழுகைகளை உரிய நேரத்திற்கு நிறைவேற்றினேனா? எத்தனை தடவைகள் தஹஜ்ஜத் தொழுகைகளை நிறை வேற்றினேன்? சுன்னத்தான தொழுகைகளை எந்தளவு நிறை வேற்றினேன்? எனது சொத்திலிருந்து எத்தனை ரூபாய்களை இறை பாதையில் செலவு செய்தேன்? மற்றைய சகோதரர் களுடனும் இரத்த உறவுகளுடனும் உறவுகளைப் பேணி நடந்தேனா?

மொத்தத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்தளவு நிறைவேற்றி யுள்ளேன் என எமக்குள் நாம் கேட்டுக் கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அல்லாஹ்விடத்தில் மன்றாடி பாவமன்னிப்பு தேடிக்கொள்ள வேண்டும்.




இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரி 01 கி.பி. 622 இலிருந்து ஆரம்பிக்கிறது. 2024 ஆம் ஆண்டில் இஸ்லாமிய ஆண்டு 1446 தோன்றுகிறது. இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரி 01 ஆரம்பிக்கும் போது கிறிஸ்து ஆண்டுக்கும் இஸ்லாமிய ஆண்டுக்கும் உள்ள இடைவெளி 622 ஆண்டுகளாகும். 2024 ஆம் ஆண்டில் கிறிஸ்து ஆண்டிற்கும் இஸ்லாமிய ஆண்டிற்கும் உள்ள இடைவெளி 578 ஆண்டுகள் ஆகும். இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரி ஆரம்பிக்கும் போதுள்ள இடைவெளியானது அப்படியே தொடர்வதில்லை. காலம். செல்லச் செல்ல இடைவெளி குறைந்து கொண்டே போகின்றது. காலம் செல்லச் செல்ல இடைவெளி வராது சமநிலைக்கு வந்துவிடும். அதன் பின்னர் கிறிஸ்து ஆண்டை விட இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரி முந்திவிடும். அந்நிலையில் உலகில் ஹிஜ்ரி ஆண்டின் மகத்துவம் பேணப்படும் நிலைமை உண்டாகும். இந்நிலை தோன்றக் காரணம் கிறிஸ்து ஆண்டானது (ஆங்கில, தமிழ், சிங்கள வருடங்கள்) சூரிய சுழற்சியைக் கொண்டு கணிக்கப்படுகிறது. இஸ்லாமிய ஆண்டு ஹிஜ்ரியானது சந்திர சுழற்சி மூலமாக கணிக்கப்படுகிறது. முஸ்லிம்கள் அனைத்து விடயங்களிலும் யூதர்களுக்கு மாற்றமாக தங்களது நடவடிக்கைகளை ஆக்கிக் கொள்ள வேண்டும் என்பதனையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இது இஸ்லாமிய வருடத்தின் தனித்துவத்தை எடுத்துக் காட்டுகிறது.

பசி உணவைத் தேடுவதைப் போல ஈமான் அமல்களைத் தேடும். எனவே ஈமான் உறுதி அடைந்தால் அமல்கள் செய்ய வாய்ப்புக் கிடைக்கும். அமல்கள் செய்தால் ஈருலகிலும் நிம்மதி கிடைக்கும் இந்த வருடத்தை விட அடுத்த வருடம் எனது வாழ்வில் ஈமானிய மலர்கள் மலர்ந்து செழிக்க வேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

ஒவ்வொரு வருடமும் எம்மை விட்டு பிரிந்து செல்லும் போது எமது ஆயுட்காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதனை நினைவில் நிறுத்திக் கொள்வோம். பிறக்கவிருக்கும் இஸ்லாமிய புதுவருடம் ஹிஜ்ரி 1446 இல் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவுகளையும் மனக்கசப்புகளையும் உதறித் தள்ளிவிட்டு சகோதரத்துவத்தை, பரஸ்பர புரிந்துணர்வை தோற்றுவிப்பதற்கு அல்லாஹ் அருள் புரிவானாக!

# கத்தார் மாநாட்டில் ஆப்கானிஸ்தான் அரச பிரதிநிதிகள்...

## பெண் கல்விக்கு தீர்வு தான் என்ன?





எஸ்.ஏ. சுஃப்யான்
(Senior Journalist,
Chennai -
Tamilnadu, India)

ஆப்கானிஸ்தானில் வாழும் பெண்கள் கல்வி மற்றும் சமத்துவம் இது குறித்தான விடயங்களை ஆப்கானிஸ்தான் அரசு மட்டுமே தலையிடும் என்றும் இது முற்றிலுமாக உள்நாட்டு பிரச்சினை என்று ஆப்கானிஸ்தான் அரசு தெளிவாக தெரிவித்துள்ளது.பொதுவாக தாலிபான்கள் என்ற அடையாளத்தை சர்வதேசம் தீவிரவாதம் என்று தான் இது வரை புரிந்து வைத்துள்ள நிலையில் இது போன்ற செயல்கள் மூலம் ஆப்கானிஸ்தான் அரசுக்கும் அதன் நிலைத்தன்மைக்கும் மிகுந்த கெட்ட பெயர் ஏற்படும் என்று சர்வதேச நாடுகள் கருதுகின்றனர்.

கடந்த 2021-ல் தலிபான்கள் ஆப்கானிஸ்தானை கைப்பற்றியதை அடுத்து அந்நாட்டில் பெண்களுக்கு எதிரான கட்டுப்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்ந கட்டுபாடுகள் பல்வேறு துறைகளில் தொடர்வதாக சர்வதேச மீடியாக்களில் பரவலாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தலிபான்களின் அரசை எந்த ஒரு நாடும் இதுவரை அங்கீகரிக்காத நிலையில் ஆப்கானுடன் சர்வதேச ஒருங்கிணைப்பை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டு, கடந்த 2023-ம் ஆண்டு மே மாதம் ஐ.நா (ருவைநன யேவழைளெ) முக்கிய முன்னெடுப்பை எடுத்தது.தோஹாவில் (னுழாய) நடைபெற்ற அந்தச் சந்திப்பில் பங்கேற்க, ஆப்கானின் பல்வேறு பிரதிநிதிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதேநேரத்தில், தலிபான்களுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.இந்த கூட்டத்துக்கு தலிபான்கள் அழைக்கப்படாததால், ஐநாவின் இரண்டாவது கூட்டத்தை புறக்கணிப்பதாக தலிபான்கள் அறிவித்தனர். இதையடுத்து, மூன்றாவது கூட்டம் கத்தாரில் (ஞயவயச) ஜீன் (30) ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

ஐ.நா அதிகாரிகள் முன்னிலையில் இந்த பேச்சுவார்த்தையில், தலிபான்கள் கலந்து கொள்ள உள்ளனர். ஆப்கான் அரசு சார்பில் இதில் கலந்து கொள்ள இருக்கும் குழுவுக்கு தலைமை தாங்க உள்ள அரசு செய்தித் தொடர்பாளர் ஜபி/ஹல்லா முஜாஹித், சந்திப்புக்கு முன்பாக ஆப்கான் அரசின் நிலைப்பாடு குறித்து விளக்கி உள்ளார். இந்த நிலையில் தற்போதைய தோஹா கூடுதலில் 24 நாடுகளை சார்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ள போதிலும் சிவில் சொசைட்டி மற்றும் பெண்கள் தரப்பிலான பிரதித்துவம் இல்லாமையால் ஆப்கானிஸ்தானுக்கு முழுமையாக அங்கீகாரம் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் ஆப்கானிஸ்தான் போதைபொருள் ஒழிப்பு மற்றும் சர்வதேச நாடுகளின் இணக்கபாட்டை வேண்டிய நிலையில் பெரும்பாலான நாடுகள் ஆப்கானிஸ்தான் உடனான நீண்ட தூர பயணத்தில் தங்களை இணைத்துக் கொள்ள தயாராக இருந்தது வரவேற்க கூடியதாக இருந்தது மிக சிறந்த முன்னேற்றமாக அமைந்து இருந்தது .2021 இல் இருந்து தாலிபான்கள் அதிகாரத்தைக் கைப்பற்றியதிலிருந்து அவர்கள் கலந்துகொண்ட மிக உயர்ந்த மற்றும் உயர்மட்ட சர்வதேசக் கூட்டமான தோஹா பேச்சுவார்த்தை இதுவாகும்

ஜபிஹீல்லாவின் கருத்து அடிப்படையில், ”ஆப்கானிஸ்தானில் பெண்களுக்கான உரிமைகள் குறித்த கோரிக்கைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. ஆனால், இது உள்நாட்டுப் பிரச்சினை என்று அவர் தெரிவித்துள்ளார்.இதற்கு தீர்வு காண, ஒரு தர்க்கரீதியான பாதையைக் கண்டறிய நாங்கள் பாடுபட்டு வருகிறோம். எங்கள் நாடு மீண்டும் மோதலிலும் முரண்பாட்டிலும் விழக் கூடாது. ஐநா கூட்டங்களில் தலிபான் அரசாங்கம் அனைத்து ஆப்கானிஸ்தானையும் பிரதிநிதித்துவப்படுத்தும் என்று அவர் கூறினார். ஆப்கானியர்கள் பல்வேறு குழுக்களாக கலந்து கொண்டால், நாங்கள் இன்னும் சிதறிக் கிடக்கிறோம் என்றும், எங்கள் நாடு இன்னும் ஒன்றுபடவில்லை என்றும் அர்த்தமாகிவிடும். தலிபான் அரசாங்கம் அனைத்து நாடுகளுடனும் நேர்மறையான உறவை விரும்புகிறது. இந்த தோஹா அமர்வு ஆப்கானிஸ்தான் அரசுக்கு பல்வேறு நிலைகளில் வருங்காலத்தில் கதவுகளை முழுமையாக திறப்பதாக இருந்தது .

பொருளாதார வளர்ச்சியை அடைவதில் பல்வேற தடைகளை நாங்கள் எதிர்கொண்டு வருகிறோம். அவை அகற்றப்பட வேண்டும். பொருளாதாரம் நன்றாக இருந்தால், மற்ற எல்லா பிரச்சினைகளையும் தீர்க்க முடியும்” என்று ஜீபிஹீல்லா முஜாஹித் தெரிவித்துள்ளார்.ஐ.நா முன்னெடுக்கும் இந்த பேச்சுவார்த்தையில் ஆப்கான் பெண்கள் பிரதிநிதிகள் பங்கேற்க மாட்டார்கள் என தெரிவிக்கப்பட்டது .இதனால், ஆப்கான் பெண்கள் இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆப்கானிஸ்தானில் பெண் குழந்தைகள் மேல்நிலைப் பள்ளிகளில் சேர தடைவிதிக்கப்பட்டு கடந்த மாதம் ஜீன் வரையிலான காலகட்டத்தில் 1000 நாட்கள் நிறைவடையும் நிலையில், யுனிசெப் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் கேத்தரின் ரூசெல் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார்.

அவர் தன்னுடைய அறிக்கையில், இன்றைய நாள் ஒரு சோகமான மற்றும் மனச்சோர்வு நிறைந்த நாளாக அமைந்திருக்கிறது என்றும், இந்த 1000 நாட்கள் என்பது பல இலட்சக்கணக்கான மணிநேர பாடங்களை இழந்ததற்குச் சமம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இத்தடையால் 15 இலட்சம் பெண் குழந்தைகளின், கல்விக்கான அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன என்றும், அவர்களுக்கான வாய்ப்புகள் குறைந்து, மனநலம் பாதிப்படைவதற்குக் காரணமாக அமைந்திருக்கிறது என்றும் உரைத்துள்ள கேத்தரின் ரூசெல் அவர்கள், குழந்தைகள், குறிப்பாக பெண் குழந்தைகளின் உரிமைகளை, அரசின் கொள்கைகளுக்கு பிணையக்கைதிகளாக மாற்றமுடியாது என்றும், அவர்களின் வாழ்க்கை, எதிர்காலம், நம்பிக்கை மற்றும் கனவுகள் அனைத்தும் சமநிலையில் துவங்கும் நிகழ்வு என்றும் கூறியுள்ளார்.

இந்தத் தடையின் தாக்கம் பெண் குழந்தைகளைத் தாண்டி இச்சூழல் மனிதாபிமான நெருக்கடிகளை உருவாக்குவதோடல்லாமல், ஆப்கானிஸ்தானின் பொருளாதார மற்றும் வளர்ச்சிப்பாதையில் பாதிப்புகளை உருவாக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள ரூசெல் , கல்வி, வாய்ப்புகளை மட்டும் உருவாக்குவதில்லை, மாறாக பெண் குழந்தகளை, இளம் வயது திருமணம், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் பல்வேறு உடல்நலன் சார்ந்த குறைகளிலிருந்து பாதுகாப்பதோடு, ஆப்கானிஸ்தானை அடிக்கடி பாதிக்கும் வெள்ளம், வறட்சி மற்றும் பூகம்பம் போன்ற பேரழிவுகளை எதிர்கொள்ளவும் அவர்களை வலுப்படுத்திடுகிறது என்றும் உரைத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் உதவ யுனிசெஃப் தன்னார்வலர்கள் கடுமையாக உழைப்பதாகவும், 27 இலட்சம் குழந்தைகளுக்கு ஆரம்பக்கல்வி மற்றும் 6,00,000 இலட்சம் குழந்தைகளுக்கு சமூக அடிப்படையிலான கல்வி வழங்கப்படுவதை உறுதிப்படுத்திய ரூசெல் , இவர்களில் மூன்றில் இரண்டு பங்கு மாணவிகள் பயன்பெறுவதாகவும், ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து, பள்ளி உள்கட்டமைப்பை சிறந்த முறையில் செயல்படுத்த அனைத்து முயற்சிகளையும் முன்னெடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தத் துயரமான நினைவைக் குறிக்கும் இந்நாளில், அனைத்துக் குழந்தைகளையும் உடனடியாகப் பள்ளிக்குத் திரும்ப அனுமதிக்குமாறு அரசு அதிகாரிகளைக் கேட்டுக்கொண்ட ரூசெல் அவர்கள், இச்சூழலில் முன்பிருந்ததை விட பாதிக்கப்பட்டிருக்கும் இச்சிறுமிகளின் வாழ்க்கையில் ஈடுபாட்டுடன் உழைக்கவும் ஆதரவளிக்கவும் உலகளாவிய சமூகத்தைக் கேட்டுக்கொள்வதாகவும், மக்கள் தொகையில் சம அளவு தொகை கவனிக்கப்படாமல் விடப்பட்டால் எந்த ஒரு நாடும் முன்னேற்றம் அடையாது என்பதையும் தன்னுடைய அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

பெண் குழந்தைகளை கல்வியில் இருந்து விலக்குவது பாலினப் பிரிவினை சமூகத்தைக் கட்டமைக்கும் தலிபானின் நோக்கத்திற்கும் முரணானது. நாட்டில் எந்த ஒரு பெண் சுகாதாரப் பணியாளர்களும் பயிற்சி பெறாத நிலையில், பெண்கள் எவ்வாறு அர்ப்பணிப்புள்ள மருத்துவப் பராமரிப்பைப் பெற்றிருக்க முடியும்?

உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, 2020 ஆம் ஆண்டில் ஆப்கானிஸ்தானில் கர்ப்பம் அல்லது பிரசவம் தொடர்பான காரணங்களால் ஒவ்வொரு நாளும் 24 பெண்கள் இறக்கின்றனர் - இது உலகின் மிக உயர்ந்த விகிதங்களில் ஒன்றாகும். இந்த புள்ளிவிவரம் 2001 இல் தலிபான் கடைசியாக ஆட்சியில் இருந்த சூழ்நிலையில் இருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றம் என்றாலும், நிலைமை மோசமாகிவிடும் என்று நிபுணர்கள் அஞ்சுகின்றனர்.

இஸ்லாமிய உலகின் 13 நாடுகளின் பெண் அறிவியல் பட்டதாரிகளின் சராசரி, அமெரிக்க சராசரியை (41மூ) விட மிக அதிகம். அல்ஜீரியாவின் அறிவியல் பட்டதாரிகளில் 71மூ பேர் பெண்கள். அதுபோல பஹ்ரைனில் 73மூ-மும், பாலஸ்தீனில் 49மூ-மும் பெண்கள்.

ஈரானின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மாணவர்களில் 70மூ பேர் பெண்கள். சவூதி அரேபியாவின் மாணவர்களில் 58மூ பேர் பெண்கள்.

முற்கால இஸ்லாமிய வரலாற்றில் பெண்களுக்கு கல்வியில் அளிக்கப்பட்ட சுதந்திரமும் பெண்களின் கல்வி அறிவும் வியக்க வைக்கிறது.

குறிப்பாக தாலிபான்கள் சில தலைவர்கள் இந்தியாவில் உத்தரப் பிரதேசம் மாநிலத்தில் உள்ள தேவ் பந்த் மதராஸ ாவில் இஸ்லாமிய கல்வியை கற்றவர்கள். சர்வதேச அளவிலான மிக சிறந்த புரிதலை தன்னகத்தே கொண்டவர்கள் பெண் கல்வி விடயத்தில் மாறுபட்ட சிந்தனை கொண்டு இருப்பது நமக்கு மிகவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அறிவைப் பெறுவது அனைத்து மனிதர்களுக்கும் அடிப்படைத் தகவல்களைப் பெறுவதற்கும் மதத்தின் கொள்கைகளின்படி செயல்படுவதற்கும் அவர்களுக்குத் தேவையானது . உண்மையில், எந்த மதமும் எந்த சித்தாந்தமும் கல்வி மற்றும் அறிவுக்கு இஸ்லாம் கொடுக்கும் அளவுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை, மேலும் அறிவைத் தேடுவதையும், கற்றுக்கொண்டதை பயன்படுத்துவதையும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் கட்டாயமாக்குகிறது. இதன் மூலம், இஸ்லாத்தின் கட்டிடம் எழுப்பப்பட்ட இன்றியமையாத தூண்களில் அறிவும் ஒன்றாகும். இருந்தபோதிலும், கல்வி என்பது இஸ்லாத்திற்கு எதிராக இன்று ஒரு பரவலான குற்றச்சாட்டாக உள்ளது மற்றும் பல முஸ்லீம் நாடுகளில் உள்ள ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலான கல்வி வாய்ப்புகளில் உள்ள முரண்பாடுகள் பெரும்பாலும் இதற்கு முதன்மை உதாரணமாகக் கூறப்படுகின்றன...

தாலிபான்கள் பெண் கல்விக்கு தடை விதிக்க இஸ்லாமிய சித்தாந்தம் காரணமாக அமைந்துள்ளதா ?

உங்கள் இறைவனின் பெயரால் ஓதுங்கள், மனிதனைப் படைத்து, ஒட்டிய வடிவில் இருந்து படைத்தான்..

உங்கள் இறைவன் மிகவும் தாராளமானவன், கற்பித்தவன். மனிதனுக்குத் தெரியாததைக் கற்றுத் தந்தான்”

திருக்குர்ஆன் (96:1-5)

அறிந்தவர்கள் ஐயமும் அறியாதவர்களையும் சமமாகக் கருத முடியுமா?” ஜஆனால்ஸ நுண்ணறிவு உள்ளவர்கள் மட்டுமே இதை மனதில் கொள்கிறார்கள்!”

(அல்குர்ஆன் 39: 9)

(இது) நாம் உமக்கு இறக்கியருளப்பட்ட ஒரு புத்தகம் (குர்ஆன்), அதன் வசனங்களை அவர்கள் ஆழ்ந்து சிந்திக்கவும், அறிவுள்ளவர்கள் நினைவில் கொள்வதற்காகவும் ஆசீர்வாதங்கள் நிறைந்தது .

” (குர்ஆன் 38:29)

ஒரு அடிமைப் பெண்ணைப் பெற்றெடுத்து, அவளுக்கு நன்னடத்தை கற்பித்து, அவளுடைய கல்வியை மேம்படுத்தி, பின்னர் அவளை மணம் செய்து, திருமணம் செய்துகொள்பவருக்கு, நபிகள் நாயகம் கூறினார். இரட்டை வெகுமதி அல்லாஹ்வின் உரிமையையும், எஜமானரின் உரிமையையும் கடைப்பிடிக்கும் எந்த அடிமையும் இரட்டிப்பு ஜவெகுமதிஸ பெறுவான்” என்று நபிகள் நாயகம் ஸல் அவர்கள் தெளிவாக கூறினார்கள்.

குர்ஆன் மற்றும் ஹதீஸின் மேற்கூறிய கண்ணோட்டம் பெண்களின் கல்வி பற்றிய இஸ்லாத்தின் உண்மையான நிலைப்பாடாகும். இஸ்லாமோ, மரபுகளோ பெண்களை அறிவைப் பெறுவதைத் தடை செய்த சந்தர்ப்பம் இல்லை.. உண்மையில், வரலாற்றில் பல நிகழ்வுகள் பெண்கள் அறிஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் கருதப்பட்டதைக் காட்டுகின்றன.

எங்களுக்கு புரியாத புதிர் ஒன்று என்றால் தாலிபான்கள் எந்தவொரு அடிப்படையில் பெண்கள் கல்வி கற்பதை தடுக்கிறார்கள் என்பதை நாம் எந்த விதத்திலும் புரிந்து கொள்ள முடியாத ஒன்றாக இருக்கிறது. முழுமையாக இஸ்லாமிய சித்தாந்தத்தின் அடிப்படையில் உருவான தாலிபான்கள் இஸ்லாமிய அடிப்படையிலான அறிவை நன்கு பெற்ற நிலையில் அவர்கள் எப்படி பெண் கல்வியை மறுக்கிறார்கள் என்பது தான் நம்மை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

உலகத்திலே வேறெந்த தத்துவார்த்த ரீதியில் ஆன சித்தாந்தமும் இஸ்லாம் கூறும் அளவிற்கு கல்வியை குறித்து வலியுறுத்தி கூறவில்லை. இஸ்லாமிய அடிப்படையிலான தத்துவம் ஒரு விடயத்தை கூறினால் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கட்டாயமான கட்டளையை தான் இஸ்லாம் பிறப்பிக்கும். இஸ்லாமிய வாழ்வியல் சார்ந்த நம்பிக்கைகள் உறுதியான கொள்கையை தவிர அங்கொன்றும் இங்கொன்றுமாக எந்த இரண்டாம் நிலை போதனைகளை எந்த இடத்திலும் நாம் காண கூடியதாக இல்லை . அதற்கு வழியே இல்லை என்பதே உண்மையாகும்.

குறுகிய காலத்தில், குர்ஆன் மற்றும் பாரம்பரியத்தின் வெளிப்படையான கண்ணோட்டம் வேறு எதையாவது கூறும்போது, கல்வியின் பற்றாக்குறை இஸ்லாத்தில் பெண்களின் முன்னேற்றத்தின் பாதையில் ஒரு முட்டுக்கட்டையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை காண கூடியதாக இருக்கிறது.பெண்கள் கல்வி கற்பதை இஸ்லாம் தடை செய்யவில்லை மாறாக கல்வியை வலியுறுத்துகிறது. பெண் கல்வி குறித்த அறிஞர்களின் எதிர்மறையான நிலைப்பாட்டை இன்று நாம் காண்பது அவர்களின் கலாச்சாரம் மற்றும் கல்விப் பின்னணியின் தாக்கம் கொண்ட அணுகுமுறையாகும். ஆனால் இஸ்லாம் எல்லா நிலைகளிலும் கல்வியை இறை நம்பிக்கையின் ஒரு அங்கமாக வடிவமைப்பு செய்துள்ளது.

ஏதேச்சகார பலவந்த சக்திகள் உலகினில் பல்வேறு இடங்களில் பெண்கள் தங்கள் பாலினத்தின் காரணமாக எந்த விதமான பிரச்சனையிலும் ஈடுபடக்கூடாது என்பது ஒரு அடக்குமுறை மனநிலை தான் என்பதில் நமக்கு மாற்று கருத்து இருக்க வாய்ப்பே இல்லை . இது போன்ற சக்திகள் உலகினில் ஏற்படும் எல்லா பிரச்சினைகளுக்கும் பெண்களையே காரணமாக்க விரும்புகிறார்.

இஸ்லாம் பெண்கள் அறிவைத் தேடுவதைத் தடுக்கிறது“ என்ற மாய பிம்பத்தை கட்டமைக்க முயன்று அதில் வெற்றி பெற்று வருகின்றனர் என்பது துரதிர்ஷ்டமான செய்தியாகும். இது இஸ்லாமிய சிந்தனைகளுக்கு எதிராக வரையறுக்கப்பட்ட மற்றும் தீவிரமான அரசியல் பார்வை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒரு பக்கம் தாலிபான்கள் கடும்போக்கு வாதம் கொண்ட கொடுங்கோல் அமைப்பு என்பதை ஊடகங்கள் மூலம் சர்வதேச நாடுகள் தொடர்ந்து பரப்பி வருகின்றன. அதுவும் பெண்களை ஆப்கானிஸ்தானில் மிகவும் மோசமான முறையில் நடத்துவதாக மேற்கத்திய நாடுகள் குற்றம் சுமத்தி வருகின்றனர் . உண்மையில் பெண் கல்வி இல்லாத ஒரு தேசத்தின் வளர்ச்சி எந்தவொரு நிலையிலும் சாத்தியமே இல்லை. பெண்கள் அறிவியல் ஆய்வுகள், சுகாதாரம் மற்றும் மருத்துவம், சுற்றுலா துறை, சமூக கட்டமைப்பு என்று எல்லா துறைகளிலும் கோலாச்சக் கூடிய அளவில் வளர்ந்தால் மட்டுமே ஒரு தேசம் எல்லா நிலைகளிலும் முழுமை அடையும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க வாய்ப்பே இல்லை.

இந்த நிலையில் இஸ்லாத்தின் பூரணமான தத்துவத்தை உள்வாங்கி ஆட்சி செய்யக்கூடிய ஒரு அரசு எப்போதும் நிச்சயமாக கல்வியை மறுப்பதற்கு எந்த நிலையிலும் சாத்தியமே இல்லை. இங்கு தான் நமக்கு தாலிபான்கள் குறித்து சில குழப்பங்கள் ஏற்படுகிறது. இஸ்லாமிய ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்ட கல்வியை எந்தவொரு நியாயமான காரணங்கள் இல்லாமல் தாலிபான்கள் மறுக்க நியாயமான எந்தவொரு காரணமும் இல்லை என்பதே நிதர்சனமான உண்மையாகும். ஆனாலும் தற்போதைய நிலையில் ஆப்கானிஸ்தான் வரும் காலங்களில் உலகில் தவிர்க்க முடியாத மாபெரும் சக்தியாக எல்லா நிலைகளிலும் வளர்ச்சி அடைய கூடிய அளவிலான மாபெரும் சக்தியாக திகழும் என்பதில் எந்த ஐயமும் இல்லை. காரணம் அந்த நாட்டில் காணப்படும் இயற்கை செல்வங்கள் மற்றும் கனிம வளங்கள் தான். உலகின் மிகப்பெரிய பெரிய பொருளாதார வல்லமை கொண்ட சக்திவாய்ந்த நாடுகள் தற்போது ஆப்கானிஸ்தான் நாட்டில் மிகப் பெரிய அளவில் ஆன முதலீடுகளை செய்து வருகிறது. இதன் மூலம் ஆப்கானிஸ்தான் உள்கட்டமைப்பு மிகவும் சிறப்பான வளர்ச்சியை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் பெண்கள் சக்தி, கல்வி மிகவும் முக்கியமான ஒன்று என்பதை ஆப்கானிஸ்தான் ஆட்சியாளர்கள் மறந்து விட கூடாது. தற்போதைய நிலையில் கத்தார் மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் அவர்களை மீண்டும் நல்ல பணிகளை முன்னெடுத்துச் செல்ல உந்துதலாக அமையும் என்பதை நாம் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## மனநலமும் ஆலோசனையும் 38

# மண வாழ்வில் மனைவியின் எதிர்பார்ப்பு

எதிர்காலத்தில் ஏதாவது நல்லது நடக்கும் என்ற வலுவான நம்பிக்கையை எதிர்பார்ப்பு என்று அழைக்கலாம்.

திருமண உறவின் போது தம்பதிகள் ஒவ்வொருவரும் ஏதோ முக்கியமான எதிர்பார்ப்புகளுடன் வாழ்கின்றனர். அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறும் சந்தர்ப்பங்களில் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் அடைவார்கள். அந்த எதிர்பார்ப்புகள் நிறைவேறாத போது ஏற்படும் மனநிலையை இங்கு இலகுவாக விவரிக்க முடியாது.

மணவாழ்க்கையில் மனைவியின் எதிர்பார்ப்பு கணவனின் எதிர்பார்ப்பை விட சற்று வித்தியாசமாக இருக்கும். சிலசமயம் ஆழமானதாக இருக்கும். அதுபற்றி சுருக்கமாக நோக்குவதே இந்த கட்டுரையின் நோக்கமாகும்.

தன் கணவன்.....

- எப்போதும் தனக்கு துணையாக நிற்பதை...
- அவளை பாதுகாக்கும் அரணாக இருப்பதை...
- அவள் இதயத்தின் மொழிகளை புரிந்து கொள்வதை....
- அவளது ஏக்கங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் நல்ல செவிசாய்ப்பாளராக இருப்பதை....
- அவளுடன் எப்போதும் நேர்மையாக இருப்பதை....
- மறைப்புகள் இல்லாமல் வெளிப்படையாக நடந்து கொள்வதை.....
- அவளுக்கு மிகப்பெரிய ரசிகனாக இருப்பதை...
- அவளை ஊக்கமளிக்கும் முதல் நபராக இருப்பதை...
- அவள் மனதில் வலிமையை வளர்க்கும் வழிகாட்டியாக இருப்பதை..
- அவளால் வெகுவாகக் கவரப்படும் ஆளாக இருப்பதை...
- எப்போதும் அவளுக்காக இருப்பதை...
- அவளை எந்த இடத்திலும் விட்டுக்கொடுக்காமல் இருப்பதை...
- தூரத்தில் இருந்தாலும் அவள் நெஞ்சுக்கு நெருக்கமாக இருப்பதை...
- அவள் மகிழ்ச்சியின் முதன்மை ஆதாரமாக இருப்பதை...
- அவள் மையமாக கொண்டிருப்பதை....
- உறவில் எப்போதும் உற்சாகமும் ஆர்வமும் உள்ளவராக இருப்பதை...

காணவே அவள் ஆசைப்படுகிறாள்.

அவற்றை தனது எதிர்பார்ப்புகளாக ஆக்கிக் கொள்கிறாள்.

இந்த எதிர்பார்ப்புகள் எல்லாம் கூடாது என்பதல்ல. அதேநேரம் இவை எல்லாவற்றையும் எப்படியோ நிறைவேற்றியே ஆக வேண்டும் என்பதும் இதன் பொருள் அல்ல. மனைவி

தன் எதிர்பார்ப்புகளை அவள் வாய் திறந்து சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இயல்பாகவே அவளிடம் இவ்வாறான பல எதிர்பார்ப்புகள் உருவாகின்றன என்பதை கணவன் புரிந்து கொள்ள கடமைப்பட்டிருக்கிறான் என்பதுதான் இங்கு முக்கியமாக கருத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

எதிர்பார்ப்புகள் அனைத்தையும் இருவரும் சரியாகவும் சமமாகவும் நோக்கி அவற்றில் முக்கியமானவற்றை முதன்மைப்படுத்தி நிறைவேற்ற முன்வந்தால் அழகான ஆரோக்கியமான திருமண உறவை உருவாக்கிய உத்தமராக ஆகலாம்.



அஸ்ஹர் அன்ஸார் FRSPH (UK)
மனோதத்துவ ஆலோசனை நிபுணர்
மனோதத்துவ எழுத்தாளர்

# உயர்தர தொழில்நுட்ப பிரிவில் அம்பாறை மாவட்டத்தில் முதலாம் நிலையினை பெற்ற இஸ்ரா ஹஷ்பானி பாராட்டி கௌரவிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

அண்மையில் வெளியான க.பொ.த (உ/த) பரீட்சை - 2023 (2024) பெருபேறுகளின் அடிப்படையில் உயர்தர தொழில்நுட்ப பிரிவில் அம்பாறை மாவட்ட ரீதியாக முதலாம் நிலையைப் பெற்ற கல்முனை கல்வி வலய பாடசாலையான மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) மாணவி ஐ.எப். இஸ்ரா ஹஷ்பானி பெற்றுள்ளார்.

மேலும் இக் கல்லூரி மாணவியான எம்.எம்.எப். பத்துனா மூன்றாம் நிலை பெற்று பாடசாலைக்கும், அவர்களது பெற்றோர்களுக்கும் பெருமை சேர்த்துள்ளனர் .

அம்பாறை மாவட்டத்தில் முதல் நிலையைப் பெற்ற கல்முனை கல்வி வலய பாடசாலை மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் அவர்களின் தலைமையில் மஹ்மூத் மகளிர் கல்லூரியில் இடம் பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி. சுஜாதா குலேந்திரகுமார் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# ஒற்றுமை பெருந்தகைமையின் நிகழ்வு



சமூக ஒற்றுமை மற்றும் பெருந்தகைமையின் வெற்றியை பறைசாற்றிடும் ஓர் நிகழ்வு இலங்கையிலுள்ள தொண்டு நிறுவனமான CareStation நடாத்திய "Inspire and Ignite: An Evening of Impact" நிகழ்வு அண்மையில் (ஜுன் 15) தெஹிவளையில் அமைந்துள்ள ஐக்கான் ஹையாத் இல் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சமூகத் தலைவர்கள், பரோபகாரர்கள், நன்கொடையாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் அர்ப்பணிப்பாளர்கள் போன்றோர் "பின்தங்கிய சமூகங்களை ஆதரித்து மேம்படுத்துதல்" என்ற சீரிய நோக்கத்தின் கீழ் ஒன்றிணைந்தனர்.

ரஸ்னி ராஷீக் மற்றும் காலிப் காசிம் ஆகியோரால் இணைந்து நிறுவப்பட்ட CareStation நிறுவனம், அரசால் பதிவு செய்யப்பட்ட, சமூக மேம்பாடு மற்றும் சமூக நலனை கருத்திற்கொண்டு செயற்படும் அரசியல் மற்றும் மத சார்பற்ற அமைப்பாகும். 22 மாவட்டங்களில் 368க்கும் மேற்பட்ட பதிவுசெய்யப்பட்ட தன்னார்வலர்களுடன் இணைந்து CareStation ஆண்டு முழுவதும் பாரிய சேவைகளை புரிந்து வருகின்றது.

இதில் சிறப்பு விருந்தினர்களான பேரியல் அஷ்ரப் மற்றும் மிஸானி சல்பிட்டிகோரள ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வின் வெற்றியானது ஒற்றுமையின் சக்தி மற்றும் பொதுவானதொரு நோக்கத்திற்காக மக்கள் ஒன்றிணைந்தால் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்கள் ஆகியவற்றுக்கான சான்றாகும் என்பதுடன், CareStation தனது இலக்கை தொடர்வதற்கும் சமூக மேம்பாடு மற்றும் சமூக நலனில் இன்னும் பாரியளவிலான முன்னேற்றங்களைச் செய்வதற்கும் எதிர்நோக்கி காத்திருக்கிறது.

CareStation குறித்த மேலதிக தகவல்களுக்கும் மற்றும் நீங்கள் எவ்வாறு அதன் செயற்பாடுகளில் பங்குபெறலாம் என்பது பற்றியும் அறிந்து கொள்ள தயவுசெய்து பின்வரும் வலைதளத்தைப் பார்வையிடவும் [www.carestationsl.org] (http://www.carestationsl.org).

# அல்குர்ஆன் உங்கள் இதயத்துடன் பேசுகிறது....



### கஷ்ட நிலையில் கடன் உதவி

(கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு ) அழகான முறையில் அல்லாஹ்விற்காக கடன் கொடுப்பவர் யார்? அதை அவன் அவர்களுக்கு பன்மடங்கு அதிகரிக்கும் படி செய்வான்.அல்லாஹ் (பொருளை சிலருக்கு) சுருக்கியும் கொடுப்பான்.(சிலருக்கு) பெருக்கியும் கொடுப்பான் அன்றி அவனிடம் நீங்கள் மீண்டும் கொண்டு வரப்படுவீர்கள். (2:245)

### நன்மையான வழியில் செலவு செய்தல்.

நம்பிக்கையாளர்களே! பேரும் நட்பும் பரிந்துரையும் இல்லாத (நியாயத் தீர்ப்பின்) நாள் வருவதற்கு முன்னர் நாம் உங்களுக்கு வழங்கி இருப்பதிலிருந்து (நன்மையான வழியில்) நீங்கள் செலவு செய்யுங்கள். (இதை ) நிராகரிப்பவர்கள் தான் (தங்களுக்கு தாமே தீங்கிழைத்துக் கொள்ளும் ) அநியாயக்காரர்கள். ( 2 : 254 )

### ஏழு கதிர்கள் நூறு வித்துக்கள்

( நபியே ) அல்லாஹ்வுடைய பாதையில் தங்களுடைய பொருளை செலவு செய்தவர்களுடைய (பொருளின் ) உதாரணம் ஒரு வித்தை உதாரணத்தை ஒத்திருக்கிறது.அ(ந்த வித்)து ஏழு கதிர்களை தந்தது. ஒவ்வொரு கதிரிலும் நூறு வித்துக்கள் ( ஆகா எழுநூறு வித்துக்கள் இஅந்த ஒரு விதத்திலிருந்து உற்பத்தியாயின) அல்லாஹ் தான் விருப்பியவர்களுக்கு (இதை பின்னும்) இரட்டிப்பாக்குகின்றான்.ஏனெனில் அல்லாஹ் ( வழங்குவதில் ) மிக்க விசாலமானவனும் மிக அறிந்தவனுமாகவும் இருக்கின்றான். (2:261)

### மார்க்கத்தில் நிர்பந்தம் இல்லை

"இஸ்லாம் " மார்க்கத்தில் நிர்பந்தமே இல்லை. ஏனென்றால் வழிகேட்டிலிருந்து (விலகி) நேர்வழி (அடைவது எவ்வாறென்று) தெளிவாகிவிட்டது.ஆகவே எவர் ஷைத்தானை நிராகரித்து விட்டு அல்லாஹ்வை நம்பிக்கை கொள்கிறானோ அவர் நிச்சயமாக அறுபடாத பலமானதொரு கயிற்றை பிடித்துக்கொண்டார். அல்லாஹ் (அனைத்தையும்) நன்கு செவியுறுபவனாகவும் மிக அறிந்தவனுமாகவும் இருக்கின்றான். (2 : 256 )

(இப்னு தௌபீக் ஆலிம்)

# நான் காலஞ்சென்ற ஜனாதிபதியின் மகன் என்ற வகையில் நாட்டை கட்டியெழுப்பும் உத்தரவாதத்தை உங்களுக்கு அளிக்கின்றேன்

## ஏறாவூரில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ






(ஏ.எச்.ஏ. ஹுஸைன்)

நவீன உலகில் வளமான டிஜிற்றல் எதிர்காலத்திற்காக இளைய தலைமுறையை ஸ்மார்ற் டிஜிற்றல் கணனிப் பயன்பாட்டில் தேர்ச்சி பெற்ற சமூகமாக மாற்றுதல் எனும் எதிர்க்கட்சித் தலைவரின் எண்ணக்கருவுக்கமைவாக டிஜிற்றல் கற்றல் வகுப்பறை, கணினிகள், ஆங்கில அகராதிகள் ஆகியவற்றைக் கையளிக்கும் நிகழ்வு ஏறாவூர் அல்முனீறா பாலிகா மகா வித்தியாலயத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிறேமதாஸவின் பங்கு பற்றுதலுடன் கடந்த அண்மையில் இடம்பெற்றது.

சுமார் 12 இலட்ச ரூபாய் பெறுமதியான கணினி உபகரணங்கள் இங்கு மாணவர்களின் கற்றலுக்காக கையளிக்கப்பட்டன. அத்துடன் சர்வதேச மொழியான ஆங்கிலத்தைக் கற்றுக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் ஒரு தொகுதி ஆங்கில அகராதிகளும் கையளிக்கப்பட்டன.


நிகழ்வில் உரையாற்றிய சஜித் பிறேமதாஸ நான் காலஞ்சென்ற ஜனாதிபதியின் மகன் என்ற வகையில் உங்களுக்கு உத்தரவாதம் அளிக்கின்றேன்.

இந்த நாட்டை இன மத பேதமற்ற முறையில் ஒன்றுபடுத்தி வளப்படுத்துவேன். வடக்கு கிழக்கு உட்பட சீரழிந்து கிடக்கும் நாட்டை தமிழ் முஸ்லிம் சிங்களம் என்ற இன மத பேதமின்றிக் கட்டியெழுப்ப வேண்டும். அதற்குரிய காலம் கனிந்துள்ளது. இவ்வாண்டு முடிவடைவதற்குள் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட பாடசாலைகளை ஸ்மார்ற் பாடசாலைகளாக மாற்றும் திட்டத்தை ஆரம்பிக்வுள்ளோம். ஸ்மார்ற் டிஜிற்றல் கணினி கற்றல் வசதிகளை ஏற்படுத்தித் தரப்படும். அந்த வகையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 360 பாடசாலைகள் வளமடையும்." என்றார்.

நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ், முன்னாள் இராஜாங்க அமைச்சர்களான எம்.எஸ்.எஸ். அமீரலி, எஸ். கணேசமூர்த்தி, கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் எம்.எஸ். சுபைர் உட்பட மேலும் பல அரசியல் பிரமுகர்களும் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்களும் பெற்றோரும் கலந்து கொண்டனர்.

# "முத்துமீரானின் பேனாமுனை ஓய்ந்தாலும் புகழ் ஓங்கியே நிற்கும்"

## - மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாட் அனுதாபம்! -





எழுத்து, இலக்கியம் மற்றும் அரசியற் செயற்பாடுகளால் சமூக முன்னோடியாகத் திகழ்ந்தவர் சட்டத்தரணி எஸ்.முத்துமீரான் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

முத்துமீரான் இறையடி சேர்ந்ததையிட்டு, அவர் வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளதாவது,

"நாடறிந்த இலக்கியவாதியின் இழப்பு நமது சமூகத்தின் பேனா முனைக்கு விழுந்த பேரிடி. முஸ்லிம்களின் மரபியல் செயற்பாடுகளை எழுத்துக்களாக்கிய இவரது பேனா ஓய்ந்தாலும், அவரது புகழ் ஓயாது.

சமூகத்தின் பிரதிபலிப்புக்கள் இவரது இலக்கியத்தின் பேசுபொருளாகின. சிறந்த சட்டத்தரணியாகப் பணியாற்றி, பல விடயங்களில் தனக்கிருந்த ஆவல்களை அடையாளப்படுத்தினார். ஆசிரியர் பணியிலும் முத்துமீரானின் ஆளுமைகள் அலங்காரமாகவே அடையாளமாகிறது.

அரசியல் ரீதியாக நெருங்கிப் பழகாவிடினும், எமது கட்சியை நெறிப்படுத்துவதில் கண்ணாகச் செயற்பட்டவர். இவரது மகனின் மனைவியார், மூதூர் பிரதேச சபை உறுப்பினராகச் செயற்பட்டவர். மகனார் எமது கட்சியின் தீவிர செயற்பாட்டாளர். விதியின் ஏற்பாடுகள் எல்லோரையும் உலகத்தைவிட்டுப் பிரிக்கவே செய்யும்.

எல்லாம் வல்ல இறைவன் பிரிவுகளைத் தாங்கும் மன பலத்தை எமக்குத் தரட்டும்! தோப்புமீரானுக்கு சொர்க்க வாசல் திறக்கட்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ்! அன்னாரைப் பொருந்திக்கொண்டு, அவருக்கு ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் உயர் மிகு சுவன பாக்கியத்தை வழங்குவானாக.



# தொடர் சம்பியன் பட்டம் வென்ற சாய்ந்தமருது பிளாஸ்டர் வீரர்கள் கௌரவிப்பு

கிழக்கு மாகாண அம்பாறை மாவட்ட முன்னணி விளையாட்டுக்கழகங்களில் ஒன்றான சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக்கழக வீரர்கள், கிழக்கு மாகாண முன்னணி விளையாட்டுக்கழகங்களை வீழ்த்தி தொடர்ச்சியாக மூன்று சம்பியன் பட்டங்களை பெற்றமையை பாராட்டி, வீரர்களுக்கு கௌரவமளிக்கும் நிகழ்வு கழக முகாமையாளர் எம்.எம். பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கடந்த (05) வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

கழகத் தலைவரும், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை உத்தியோகத்தருமான எம்.பி.எம். பாஜிலின் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் கழக தவிசாளரும், ஓய்வுபெற்ற பிரதியதிபருமான ஏ.எம். நிஸாரின் ஆரம்ப உரையும் அதனை தொடர்ந்து கழக ஊடக செயலாளரும், கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினருமான நூருல் /ஹுதா உமரின் அறிமுக உரையும் இடம்பெற்றது.

இவ்விழாவிற்கு கல்முனை அபிவிருத்தி குழுத்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ். எம்.எம். முஷாரப் பிரதம அதிதியாக கலந்து கொண்டு வீரர்களை பாராட்டி கௌரவித்ததுடன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழகத்திற்கு தேவையான விளையாட்டு உபகரணங்களையும் வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எல். சம்சுதீன், சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய அதிபர் எம்.எஸ்.எம். ஸை புதீன், பிரதியதிபர் ரீ.கே.எம். சிராஜ் உட்பட பிரதேச கல்விமான்கள், தொழிலதிபர்கள், கழக நிர்வாகிகள், விளையாட்டு வீரர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

# புகழ்பூத்த மூத்த கவிஞர் மு.சடாட்சரன் காலமானார்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனையை பிறப்பிடமாகவும் பெரிய நீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்ட நவீன இலக்கிய வளர்ச்சியில் கிழக்கிலங்கையின் புகழ் பூத்த கவிஞர்களுள் ஒருவராக விளங்கிய ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர், கவிஞர், கலாபூஷணம் மு.சடாட்சரன் தனது 84 ஆவது வயதில் காலமானார்.

ஈழத்து கலை இலக்கிய பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் மூத்த கவிஞர் மு.சடாட்சரன்.

அனைவரது பாராட்டையும் பெற்றவர். கிழக்கின் கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்த மறைந்த கவிஞர் நீலாவணனின் பேரன்புக்கு பாத்திரமானவர்.

தனது வாழ்நாளில் பெரும் பகுதியை எழுத்து மற்றும் கலை இலக்கிய துறைக்காக அர்ப்பணித்தவர். இன்னும் இரு நூல்களை வெளியிட வேண்டும் என முனைப்புடன் செயற்பட்டுவந்தவர். அன்னாரின் இழப்பு ஈழத்து கலை இலக்கிய பரப்பில் பெரும் வெற்றிடத்தை விட்டுச் சென்றுள்ளது.

முஸ்லிம் மாணவர்களுக்கும் தனது கல்வி சென்றடைய வேண்டும் என்பதற்காக கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியில் உயர்தர மாணவர்களுக்கு ஆசிரியராக பணியாற்றியமை மறக்க முடியாத அனுபவமாகவுள்ளது.

## இந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தனும் தானும் எப்போதும் பிரிக்கப்படாத இலங்கைக்காக தம்மை அர்ப்பணித்தவர்கள் என்றும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

ஆர். சம்பந்தனுடன் உடன்பாட்டுடன் முன்நோக்கி கொண்டு வந்த அந்தக் கலந்துரையாடல்களை வெற்றிகரமாக நிறைவு செய்ய அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

திருகோணமலையில் அன்னாரது இல்லத்தில் நேற்று (07) பிற்பகல் நடைபெற்ற சம்பந்தனின் இறுதி கிரியையில் கலந்து கொண்ட போதே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மறைந்த ஆர். இரா.சம்பந்தனின் இறுதிக் கிரியைகள், இன்று (07) பிற்பகல் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி அரசியல் தலைவர்கள், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சித் தலைவர்கள் உட்பட பெருந்திரளான மக்களின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

ஆர். சம்பந்தனின் மரணம் தொடர்பில் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்த ஜனாதிபதி, அவரது மறைவு நீண்டகால நண்பரின் இழப்பு எனவும் குறிப்பிட்டார்.

ஆர். சம்பந்தன் எப்பொழுதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டதாகத் தெரிவித்த ஜனாதிபதி, தேசிய காணி ஆணைக்குழுவின் வரைவு தற்போது பாராளுமன்றத்தில் சமர்பிக்க தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வனவளத் திணைக்களத்துடன் இருக்கும் பிரச்சினைகளை சட்டரீதியாக தீர்க்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்க எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக ஆர். சம்பந்தனின் பங்களிப்பைப் பாராட்டிய ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் ஒரு மாற்றுப் பிரதமர் என்று குறிப்பிட்டதுடன், ஆர். சம்பந்தன் தமிழ் மக்களின் பிரச்சினைகளை மாத்திரமன்றி ஒட்டுமொத்த இலங்கை மக்களின் பிரச்சினைகளை முன்வைத்து, உண்மையான எதிர்க்கட்சித் தலைவரின் பண்புகளை வெளிப்படுத்தியதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

இதேவேளை, தேர்தல்கள் குறித்தும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி, யார் நீதிமன்றத்திற்கு சென்றாலும், இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் என்றும், அதன் பின்னரே பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் தெரிவித்தார்.

# LankaPay Technnovation Awards இல் அமானா வங்கிக்கு 'சிறந்த பொது ATM செயற்படுத்துநர்' விருது வழங்கி கௌரவிப்பு




அமானா வங்கிக்கு சிறந்த பொது செயற்பாட்டாளர் (gpupT C) விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. தேசிய LankaPay கொடுப்பனவு வலையமைப்பை செயற்படுத்தும் LankaClear Limited இனால் அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த LankaPay Technnovation Awards நிகழ்வில் இந்த விருது வழங்கப்பட்டிருந்தது. இலத்திரனியல் கொடுப்பனவுகளை ஊக்குவிப்பது மற்றும் தொழினுட்ப புத்தாக்கங்களினூடாக வாடிக்கையாளர் சௌகரியத்தை மேம்படுத்துவதில் தொடர்ச்சியாக கவனம் செலுத்தும் நிதிசார் தொழினுட்ப புத்தாக்கங்களுக்கு இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வில் கௌரவிப்பு வழங்கப்பட்டிருந்தது.

இந்த கௌரவிப்பு தொடர்பில் அமானா வங்கியின் பிரதம செயற்பாட்டு அதிகாரி இம்தியாஸ் இக்பால் கருத்துத் தெரிவிக்கையில், "புத்தாக்கம் மற்றும் தொழினுட்பம் போன்றவற்றினூடாக நிதிசார் உள்ளடக்கம் வாடிக்கையாளர் சென்றடைவு மற்றும் சௌகரியம் ஆகியவற்றில் நாம் தொடர்ச்சியாக காண்பிக்கும் முயற்சிகளுக்கு மீண்டும் ஒரு முறை LankaPay இனால் கௌரவிக்கப்பட்டுள்ளோம். எமது டிஜிட்டல் செயற்படுத்தப்பட்ட சுய வங்கிச் சேவை நிலைய வலையமைப்பை விஸ்தரிப்பதற்கான முதலீட்டின் மூலமாக தற்போது நாடளாவிய ரீதியில் 29 பகுதிகளில் இந்நிலையங்களைக் கொண்டுள்ளோம். இவற்றினூடாக, பின்தங்கிய பகுதியைச் சேர்ந்தவர்களுக்கும் இலகுவான முறையில் வங்கிக் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்ளும் வசதியை வழங்குகின்றோம். அதிகரித்துச் செல்லும் வாடிக்கையாளர்களின் தேவைகள் மற்றும் டிஜிட்டல் எதிர்காலத்தை நோக்கி இலங்கையை கொண்டு செல்லல் போன்றவற்றை நோக்கி எமது சேவைகளை மேம்படுத்துவதில் நாம் எம்மை அர்ப்பணித்துள்ளோம்." என்றார்.

# இலங்கை முஸ்லிங்கள் ஒற்றுமையை பலப்படுத்தி காஸா மக்களுக்காகவும் பிராத்திப்போம்!

## முஹர்ரம் வாழ்த்தில் கலீலுர்ரஹ்மான்

பல்வேறு இன்னல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம்கொடுத்துக்கொண்டு புதிய இஸ்லாமிய புத்தாண்டை சந்தித்திருக்கும் உலக வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் இனிய முஹர்ரம் புதுவருட வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் பொருளாளரும், கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலீலுர்ரஹ்மான் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

*1445* வது ஹிஜ்ரி வருடம் உலக வாழ் முஸ்லிங்களுக்கு நிம்மதியான பல விடயங்களை கொண்டதாக அமைந்திருந்தாலும் கஷ்டமான பல்வேறு நிலைகளையும் கொண்டிருந்ததுடன் மிக துரிதமாக எம்மை கடந்து சென்று இன்று *1446* எனும் புது வருடத்தில் நாம் கால் பதிக்கின்றோம். இந்த



வருடத்திலாவது தினமும் பல நூறு உயிர்களை தினம் தினம் காவுகொடுத்து பரிதவித்து நிற்கும் காஸா முஸ்லிம் சகோதர்கள் உட்பட உலகின் பல்வேறு இடங்களிலும் பல கஷ்டங்களுடன் வாழும் எமது சகோதர்கள் நிம்மதியாக வாழ எமது ஐவேளை தொழுகைகளில் குனூத் நாஷீலா ஓதுவதுடன் எமது துஆக்களை கூட்டிக்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்.

தனது செய்தியில் மேலும், உலகில் தோன்றியுள்ள முரண்பாடுகள் நீங்கி அமைதியான வாழ்க்கை முறை சகலருக்கும் கிட்ட இந்த சந்தர்ப்பத்தில் பிராத்தித்து கொண்டு இலங்கையிலும் உறுதியான ஆட்சிநிலை உருவாகி, நாட்டின் பொருளாதாரம் மேம்பட்டு நாடு வளர்ச்சிப்பாதைக்கு செல்ல எல்லோரும் பிராத்திப்போம்.

எதிர்வரும் காலங்களில் இலங்கை முஸ்லிம் கட்சிகள் எல்லாம் ஒன்றிணைந்து ஒரே அணியாக செயற்பட்டு முஸ்லிங்களின் உரிமைகளை எமது நாட்டில் அதிலும் குறிப்பாக வடக்கு, கிழக்கில் உறுதிப்படுத்த இந்த புத்தாண்டு தினத்தில் திடசங்கடம் பூணுவோம். மேலும் கடந்த காலங்களில் முஸ்லிம் சமுகம் உலகளாவிய ரீதியில் எதிர்கொண்ட அத்தனை கசப்பான, துயரமான நிகழ்வுகளும் இந்த இனிய இஸ்லாமிய புதுவருடத்துடன் இல்லாதொழிந்து நிம்மதியும் அமைதியுமான வாழ்க்கை எம்மை வந்தடைய இந் நன்நாளில் பிரார்த்திப்போம் - என்றார்.




பயாஸா பாஸில்

# பெண்ணே நீயும் பெண்ணா..!

பெண்களையும் , அவர்கள் கண்களையும் வர்ணித்தும் பூவுக்கு ஒப்பிட்டும் கவிஞர்கள் கவிதை படிப்பதென்னமோ உண்மைதான் பூவைப் போல .. அன்னம் போல .. என்று மென்மையானவற்றுடன் ஒப்பிட்டு மென்மை என்றாலே பெண்கள் தான் என்று நிலை உருவாகி இருக்கின்றது.

ஆனால், இப்பொழுதெல்லாம் தைரியம், துணிவு போன்ற பண்புகள் கொண்டு பல ஆளுமைகள் கொண்ட பிரதானியாக உலகம் முழுவதும் இருக்கக்கூடிய பெண்கள் காணப்படுகின்றனர்.

பிள்ளைகளை பராமரித்து வீட்டு வேலைகளை செய்து கொண்டு வீட்டை மட்டும் நிர்வகித்து வந்த பெண், இன்று வீடு தாண்டி நாட்டை ஆளும் தன்மை கொண்டவளாக காணப்படுகின்றாள்.

தாயாக, மனைவியாக, சகோதரியாக, வைத்தியராக, தாதியாக, ஆசிரியராக, ஊடகவியலாளராக, விமானியாக இன்னும் பல பரிணாமங்களில் காட்சியளிக்கிறாள்..

அரசனுக்கு ஆலோசனை வழங்கி வழிநடாத்தும் மந்திரி போல தன் கணவனுக்கு ஆலோசனை வழங்கி அவரை வழி நடாத்தும் மனைவியாக செயல்படுகிறாள். அதில் வெற்றியும் காண்கிறாள். அன்றைய காலம் போல் இன்றைய காலமில்லை.

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பேது ..?! என்ற காலம் மலை ஏறிவிட்டது. படிப்பில் மட்டுமல்ல தொழிலில் வியாபாரத்தில் பெண்கள் முன்னேறி வருகிறார்கள். காலம் பெண்களை உச்சத்தில் கொண்டு போய் வைத்துள்ளது.

வென்று வருகின்றாள் வீரப் பெண்..

பாரதி கண்ட புதுமைப் பெண்..

# இனிப்பும் கசப்பும்



சட்டத்தரணி ஏ.எம்.வைஸ்

# வழிகாட்டிக்கு யார் வழிகாட்டி

இம்முறை புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்ட ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சட்ட விரோதமாக தங்கம் கடத்தி கட்டுநாயக்கவில் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக பத்திரிகை செய்தி வெளிவந்தது.

இவர்கள் ஒரு கோடி தொன்னூறு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை சட்ட விரோதமாக கொண்டு வந்து பொலிசாரிடம் மாட்டியுள்ளார். பின் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக அந்த பத்திரிகை செய்தி கூறுகிறது.

இதில் கைது செய்யப்பட்ட ஆண் ஒரு மௌலவி என கூறப்பட்டது. அதிலும் விஷேடமாக அவர் ஒரு ஹஜ் பயண ஏற்பாட்டுக் குழுவின் வழிகாட்டியாவார். அந்த ஹஜ் முகவர் நிலையத்தால் பயணம் செய்யும் ஹஜ் பயணிகளுக்கு தலைமை தாங்கி அவர்களது வழிகாட்டியாக அழைத்துச் சென்ற மௌலவி மற்றவர் ஒரு பெண் புனித ஹஜ் பயணத்திற்கு சென்ற பெண்.

ஹஜ் பயணம் மேற்கொள்வோர் அதை புனிதமான பணியாகக் கருதுவர். இஸ்லாம் கூறும் கடமையை நிறைவேற்றி திருப்தியைப் பெறுவர். இந்தப் பயணம் முடியும் வரை, இவர்கள் அல்லாஹ்விற்குப் பொருத்தமான வழிகளில் ஈடுபடுவர். நாட்டு சட்டத்தையும் சவூதி சட்டத்தையும் மீறாது நடப்பர். இவர்களது ஒரே நோக்கம் ஹஜ் பயணத்தை புனிதமாக நிறைவேற்றி திருப்பதியடைவதாகும். இந்த புனித பயணம் ஆசை இருந்தாலும் எல்லோருக்கும் கிடைக்காததால் செல்பவர்கள் மிகவும் பேணுதலாக இருப்பர். ஒருவர் தான் வாழும் நாட்டின் சட்டங்களை மீறி நடப்பது என்பது பிழையான செயலாகும். புனிதமான பணியை செய்யச் சென்று பிழை செய்வது அந்த புனித செயலின் நன்மையை அழித்துவிடுவதாகும்.

இந்தியாவின் ஜனாதிபதியாக ஒரு முஸ்லிமான அப்துல் கலாம் தெரிவு செய்யப்பட்டு செயல்பட்டார். அவரின் செயல்பாடுகள் மக்களும் உலகமும் வியக்கத்தக்க செயலாக இருந்தன. இவர் பதவிக் காலம் முடிந்த தினத்தில் அவருக்கு வழங்கப்பட்டிருந்த ராஷ்டபதி பவான் (உத்தியோக பூர்வ பங்களா) இதிலிருந்து வெளியேறிய போது செய்த செயல் முஸ்லிம்கள் என்ற வகையில் எமக்கு பெருமை தருவதும் எமக்கு படிப்பினையுமாகும். அவர் அவரது உடுதுணிகள் நூல்கள் அடங்கிய பெட்டியை வீட்டுக்கு வெளியே கொண்டு வந்து வைத்தார். பின் அங்குள்ள வேலைக்காரர் ஒருவரை அழைத்து அந்தப் பெட்டிக்கு மேல் தண்ணீரை ஊற்றிக் கழுவும் படி பணித்தார். ஏன் அய்யா அது என்று அதிகாரிகள் வினவினர். அவர் பதிலளித்தார். நான் பதவியை விட்டு விட்டு செல்கிறேன். அவ்வாறு செல்லும் போது அரசாங்கத்தின் எந்த சொத்துக்களையும் கொண்டு செல்லக் கூடாது இந்த மாளிகை அரசானது எனக்கானதல்ல. அதன் தூசு கூட கொண்டு செல்லப்படக் கூடாது. அந்தத் தூசிகளை இங்கு விட்டு விட்டே செல்ல வேண்டும். இது எனது கொள்கை எனவே தான் பெட்டியில் தூசு ஒட்டிக் கொண்டிருந்தால் அதை விட்டு விட்டு செல்லவே நீரை ஊற்றும்படி கூறினேன் என்றார் அவர்.

தமக்கு சொந்தமல்லாத தூசைக் கூட விட்டு விட்டு சென்றார் அவர்.

இந்த நிலையில் ஹஜ் பயண வழிகாட்டியாக சென்ற மௌலவி செய்த சட்ட விரோத செயல் எவ்வளவு பாரதூரமானது. புனித ஹஜ் பயணத்தை மேற்கொண்ட அந்த பெண்மணி செய்த செயல் எவ்வளவு பாரதூரமானது. இதன் மூலம் முஸ்லிம் சமூகத்திற்கு ஏற்பட்ட மற்றும் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் ஏராளம்.

சாதாரணமாக ஹஜ் பயணம் செல்லும் போதும் திரும்பி வரும் போதும் சுங்கப் பரிசோதனை பெரிதாக இருப்பதில்லை. பரிசீலிக்காது விட்டு விடுவர். காரணம் இது புனித பயணம். தவறான செயல்கள் சட்ட விரோத செயல்பாடுகள் நடக்காது என்ற நம்பிக்கையும் ஹஜ்ஜுக்கு அதிகாரிகள் வழங்கப்படும் கௌரவமுமாகும்.

இது போன்ற சட்டவிரோத சம்பவங்கள் நடைபெற்றால் அதுவும் ஒரு மௌலவி செய்தால் புனித கடமையை நிறைவேற்ற சென்ற ஒருவர் செய்தால் அதுவும் ஒரு பெண் செய்தால் அதிகாரிகள் கொடுக்கும் கௌரவம் நீடிக்குமா நம்பிக்கை நிலைக்குமா ஹஜ் பயணம் கள்ளக் கடத்தல் வியாபாரத்தின் ஒரு அங்கம் என நினைக்கலாம் அல்லவா.

இங்கு இன்னும் சில விடயங்களை நாம் கவனிக்க வேண்டும்.

இந்த சம்பவத்தை நோக்க வேண்டும். இந்த மௌலவியும் பெண்ணும் சுங்க அதிகாரிகளினால் பரிசீலனையின் பின் வெளியே செல்ல அனுமதித்துள்ளனர். எனவே சுங்கப் பரிசோதனை முடிந்துள்ளது. இவர்கள் வெளியே வந்து வீடு செல்ல நின்ற போது பொலிசார் இவர்களை பரிசோதித்துள்ளனர். அங்கு ஒரு கோடி தொன்னூறு இலட்சம் பெறுமதியான தங்கம் இவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. இது அறிவிக்காமல் களவாக கொண்டுவரப்பட்டதால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாதாரணமாக ஏதாவது தகவல் கிடைத்தாலே இவ்வாறு பொலிசார் பரிசீலனை செய்வர். அல்லா விட்டால் சுங்கப் பரிசோதனையோடு முடிந்து விடும்.

கிடைத்த தகவலையடுத்தே பரிசோதனை நடத்தப்பட்டதாக பொலிசார் கூறியுள்ளனர்.

எனவே தகவல் கொடுத்தவர் யார் என்பதை யோசிக்க வேண்டும்.

ஹஜ் முகவர்களுக்கிடையே போட்டி பொறாமை மிக அதிகமாகும். இந்த நிலையில் இந்தத் தகவல் இன்னுமொரு ஹஜ் முகவரால் கொடுக்கப்பட்டிருக்கலாம். அதற்கு சாத்தியம் அதிகம். இந்தக் காட்டிக்கொடுக்கும் நிலையும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

மற்றது இதை மௌலவி தனக்காக செய்தாரா இன்னுமொருவருக்காக செய்தாரா என்பதையும் பார்க்க வேண்டும். ஏனென்றால் வழிகாட்டியாக செல்லும் ஒரு மௌலவி கோடி ரூபாவை வைத்திருப்பது சாத்தியமில்லை. கோடிஸ்வரரான ஒரு மௌலவி ஹஜ் பயணியாக செல்வாரே ஒழிய சிறிய சம்பளத்துக்கு ஹஜ் முகவராக செல்வார் என்பதை நம்ப முடியாது.

எவ்வாறெனினும் இந்த மௌலவி விடயத்தில் மௌலவியை வழிகாட்டியாக அமர்த்திய ஹஜ் முகவர் நிலையம் பொறுப்புச் சொல்ல வேண்டும். மௌலவிக்கு நாட்டின் சட்டம் தண்டனை வழங்கும். முகவர் நிலையத்திற்கு முஸ்லிம் விவகார திணைக்களம் தண்டனை வழங்க வேண்டும். இவ்வாறான வழிகாட்டிகளை நியமித்தமை முஸ்லிம் சமூகத்திற்கு இழிப்பெயரை தேடிக் கொடுக்க உதவியாக இருந்தமை ஹஜ் பயணத்திற்கும் நற்பெயருக்கும் களங்கம் ஏற்படுத்த உதவியாக இருந்தமை போன்றவற்றிற்கு விசாரிக்கப்பட்டு தண்டனை வழங்க வேண்டும். இது போன்ற முகவர் நிலையங்களுக்கு அனுமதி வழங்கக் கூடாது.






அரபாத் ஹஹுர்தீன்

# பரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்றார் அருண தர்ஷன

இலங்கை ஓட்டப்பந்தய வீரர் அருண தர்ஷன 2024 பரிஸ் ஒலிம்பிக்கில் பங்கேற்க தகுதி பெற்றுள்ளார்.

அதன்படி இவ்வருடம் இடம்பெறவுள்ள பரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு அவர் ஆடவர் 400 மீற்றர் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளார். பரிஸ் ஒலிம்பிக்கிற்கான இலங்கை தடகள அணியில் தருஷி கருணாரத்ன மற்றும் நதீஷா லேகம்கே ஆகியோருடன் தர்ஷன இணைகிறார்.

அருண தர்ஷன சமீபத்தில் பஹாமாஸில் நடைபெற்ற சர்வதேச தடகளப் போட்டியில் 400 மீட்டர் போட்டியில் 45.90 வினாடிகளைக் கடந்து இரண்டாவது இடத்தைப் பிடித்தார். அவர் முன்னாள் மூத்த தடகள வீரர் சுகத் திலகரத்னவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி வருவதாக, பல வட்டாரங்களில் அவர் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.




# சம்பியன் வீரர்களுக்கு மும்பையில் உற்சாக வரவேற்பு

# சம்பியன் கிண்ணத்தை ரசிகர்களுக்கு சமர்பித்த ரோஹித்

9வது ரி20 உலகக் கிண்ணத் தொடரின் சம்பியன் மகுடத்தை தென்னாபிரிக்க அணியை 7 ஓட்டங்களால் வீழ்த்திய இந்திய அணி 17 வருடங்களின் பின்னர் பின்னர் தனதாக்கி அசத்தியது. இதனால் சம்பியன் வீரர்களை வரவேற்கும் நிகழ்வு கடந்த 4ஆம் திகதி பல லட்சம் ரசிகர்கள் புடை சூழ மும்மையில் இடம்பெற்றது.

இந்த வரலாற்று வெற்றியை மக்களுடன் இணைந்து கொண்டாடும் விதத்தில் இந்திய வீரர்கள் மும்பையில் திறந்த பேருந்தில் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர். அதனைத் தொடர்ந்து பல வெற்றிகளைக் குவித்த மும்பை வான்கடே மைதானத்தில் இந்திய வீரர்களுக்கு பாராட்டு விழா நடந்ததோடு, இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் ரோஜர் பின்னி, செயலாளர் ஜெய் ஷா ஆகியோர் இந்திய அணியின் வெற்றிக்காக ரூபாய் 125 கோடி ஊக்கத் தொகையும் வழங்கினர்.

இறுதி ஓவர் வரை சென்ற போட்டியின் இறுதி ஓவரின் முதல் பந்தில் சூரியக்குமார் யாதவ் இன் பிடியெடுப்பால் இந்திய அணி வெற்றிபெற்ற அந்த தருணத்தை விட்டு இன்னும் எவரும் மீண்டு வரவில்லை. அதை நிரூபிக்கும் விதமாக கண்களை சாட்சியாக வைத்துஇ இந்திய கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வெற்றிக்கு காரணமான வீரர்களை புகழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியிருந்தனர்.

17 வருட கனவை நனவாக்கிய அந்த தருணத்தையும், வீரர்களையும் போற்றும் வகையில் தேசிய கீதத் தொனியில் ஏ.ஆர். ரஹ்மானின் இசையில் வெளிவந்த ““வந்தே மாதரம்““ என்ற பாடலை பாடிஇ பார்ப்பவர்களை ஆனந்த கண்ணீரில் ஆழ்த்தியிருந்தது அந்த தருணம்.

மேலும் அங்கு இந்திய அணியின் தலைவரான ரோஹித் சர்மான இவ்வாறு கருத்துத் தெரிவித்தார், ““சிறப்பான ஒரு அணியை வழிநடத்தியதில் நான் அதிர்ஷ்டசாலி. அணியிலுள்ள அனைத்து வீரர்களும் அருமையாக விளையாடினார்கள். மும்பை ரசிகர்களின் வரவேற்பு மெய்சிலிர்க்க வைத்தது.

இந்த உலகக் கிண்ணம் ஒட்டுமொத்த தேசத்துக்கும் சொந்தம். சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சம்பியன் கிண்ணம் ஒன்றிற்காக 11 ஆண்டுகள் காத்திருந்த ரசிகர்களுக்கு இதை அர்ப்பணிக்கிறேன்.“ எனக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் வலய உதைப்பந்தாட்ட சம்பியனானது கற்பிட்டி அல் அக்ஸா



20 வயதிற்குற்பட்ட புத்தள வலயமட்ட ஆண்களுக்கான உதைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் பலமிக்க புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை அணியை 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் வீழ்த்திய கற்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது.

இலங்கை பூராகவும் இடம்பெற்றுவரும் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி நிகழ்வுகளில் கோட்ட மட்ட நிகழ்வுகள் பெரும்பாலும் முடிவுக்கு வந்திருக்க தற்சமயம் வலய மட்ட போட்டிகள் இடம்பெற்று வருகின்றன. அதன் ஒரு அங்கமாக புத்தளம் வலய மட்ட உதைப்பந்தாட்டப் போட்டிகள் இவ்வாரம் இடம்பெற்றிருந்தது.

அதிலும் குறிப்பாக 20 வயதிற்குற்பட்ட ஆண்களுக்காக உதைப்பந்தாட்டத் தொடர் 4, 5 ஆகிய இரு தினங்களில் இடம்பெற்றிருந்தது. இப் போட்டிகள் புத்தளம் நகர பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் மொத்தம் 8 பாடசாலைகளின் அணிகள் பங்கேற்ற புத்தளம் வலய மட்ட போட்டியில் முதல் சுற்று மற்றும் காலிறுதி ஆகிய இரு போட்டியிலும் இலகு வெற்றியைப் பதிவு செய்த கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

இந் நிலையில் நேற்று முன்தினம் (5) இடம்பெற்ற அரையிறுதி ஆட்டத்தில் பலமிக்க கடையாமோட்டை முஸ்லிம் மகா வித்தியாலய அணியை எதிர்த்து விளையாடியது. இப்போட்டியின் முழு நேர ஆட்டத்திலும் இரு அணிகளும் கோல்களை உட்செலுத்தாமல் போக போட்டி சமநிலை பெற்றது. இதனால் வெற்றியாளரைத் தீர்மானிக்க பெனால்டி உதை வழங்கப்பட அதில் அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி 4:2 என்ற பெனால்டி கோல்களின் அடிப்படையில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் கால்பதித்தது. மறுபக்கத்தில் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

இதற்கமைய இடம்பெற்ற தீர்மானமிக்க இறுதிப் போட்டியில் கல்பிட்டி அல் அக்ஸ ா தேசிய பாடசாலை அணியும் புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை அணியும் பலப்பரீட்சை நடாத்தின. இதன் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணி வீரர்களும் விட்க் கொடுப்பின்றி கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இருப்பினும் இரு அணிகளாலும் கோல் கணக்கை ஆரம்பிக்க முடியாமல் போக முதல் பாதி கோலின்றி சமநிலை பெற்றது.

பின்னர் தொடர்ந்த தீர்மானமிக்க 2ஆது பாதியில் வீரர்களின் ஆட்டம் மேலும் ஆக்ரோசமிக்கதாக மாற இறுதித் தருவாயில் அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி முதல் கோலை உட்செலுத்தி தன் ஆதிக்கத்தை நிலை நிறுத்தியது. பின்னர் தொடர்ந்த ஆட்டத்தில் சாஹிரா தேசிய பாடசாலை வீரர்களால் பதில் கோலை அடிக்க முடியாமல் போக போட்டியின் முழு நேர ஆட்டம் நிறைக்கு வர கல்பிட்டி அல் அக்ஸா தேசிய பாடசாலை அணி 1:0 என்ற கோல் வித்தியாசத்தில் பலமிக்க புத்தளம் சாஹிரா தேசிய பாடசாலை அணியை வீழ்த்தி புத்தளம் வலயத்தின் சம்பியன் பட்டத்தை தனதாக்கி அசத்தியது.



# யூரோ கிண்ண உதைப்பந்தாட்டத் தொடர். அரையிறுதியில் பிரான்ஸ், ஸ்பெய்ன் பலப்பரீட்சை! தோற்று வெளியேறிய போர்த்துக்கல் மற்றும் ஜேர்மனி

யூரோ கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டியில் 5:3 என்ற பெனால்ட்டி கோல்களின் அடிப்படையில் கிறிஸ்டியானோ ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணி தோற்று வெளியேற வெற்றி பெற்ற பிரான்ஸ் அணி அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

நடப்பாண்டில் ஜேர்மனியில் இடம்பெற்றுவரும் யூரோ கிண்ண உதைப்பந்தாட்டத் தொடரில் முதல் சுற்று குழு நிலை லீக் ஆட்டங்கள் நிறைவுக்கு வந்திருக்க பலமிக்க 8 அணிகள் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளன. அதற்கமைய நேற்று முன்தினம் (5) நள்ளிரவில் இடம்பெற்ற முதல் காலிறுதிப் போட்டியில் போட்டிகளை நடாத்தும் ஜேர்மனி பலமிக்க ஸ்பெய்ன் அணியை எதிர்த்தாடியது.

இப்போட்டியின் முதல் பாதி ஆட்டம் இரு அணி வீரர்களின் அசத்தலான ஆட்டத்தால் விறுவிறுப்பாக இடம்பெற்றிருந்தது. இதனால் முதல் பாதி கோல்களி இன்றி சமநிலை பெற்றது. பின்னர் ஆரம்பித்த தீர்மானமிக்க 2ஆவது பாதி ஆட்டத்தின் 51 ஆவது நிமிடத்தில் யமால் கொடுத்த பந்துக் கடத்தலை நேர்த்தியாகப் பெற்றுக் கொண்ட டேனி ஓல்மோ கம்பத்தின் லப்புறத்தினூடாக உள்ளனுப்ப 1:0 என முன்னிலை பெற்றது ஸ்பெய்ன் அணி.

பின்னர் தொடர்ந்த போட்டியின் இறுதித் தருவாயான 89 ஆவது நிமிடத்தில் வைத்து கிம்மிக் உயர்த்தி அடித்த பந்தை உயரே எழுந்து தலையால் முட்டி கம்பத்தினுள் செலுத்திய ப்லேரியன் விரிட்ஸ் ஜேர்மனியின் கோல் கணக்கை ஆரம்பித்து வைத்து முழு நேர ஆட்டத்தை 1:1 என சமன் செய்தார். பின்னர் மேலதீக நேரம் ழுங்கப்பட அதன் 119ஆவது நிமிடத்தில் மிக்கல் மெரீனோ ஹெட்டர் செய்து பந்தை கம்பத்தினுள் அனுப்ப 2ஆது கோலை பதிவு செய்து முழு நேர ஆட்ட முழில் 2:1 என ஜேர்மன் அணியை வீழ்த்தி முதல் அணியாக அரையிறுதிக்குத் தெரிவானது ஸ்பெய்ன் அணி பின்னர் இடம்பெற்ற



2ஆவது அரையிறுதிப் போட்டியில் சமபலமிக்க இரு அணிகளான ரொனால்டோ தலைமையிலான போர்த்துக்கல் அணியும், பிரான்ஸ் அணியும் பலப்பரீட்சை நாத்தின. இப் போட்டி நேற்று இலங்கை நேரப்படி நள்ளிரவு 12.30 மணிக்கு வோல்ஸ்பார்க் அரங்கில் நடைபெற்றது. இப்போட்டியின் முதல் பாதி ஆட்டம் கோல்கள் இன்றி நிறைவுக்கு வந்தது.

இந்நிலையில் தீர்க்கமான 2ஆவது பாதி ஆட்டம் ஆரம்பிக்க இரு அணி வீரர்களும் கோலுக்கான முயற்சியில் தீவிரம் காட்டினர். இருப்பினும் இரு அணிகளின் தடுப்பு வீரர்கள் மிக அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் முழு நேர ஆட்டம் சமநிலை பெற்றது. பின்னர் போட்டியின் வெற்றியாளரை தீர்மானிக்கும் மேலதீக நிமிடங்கள் வழுங்கப்பட்ட போதிலும் அந்நேரத்திற்குள்ளும் இரு அணிகளும் தத்தமது கோல் கணக்கை ஆரம்பிக்காது தடுமாறினர்.

இதன் விளைவாக வெற்றியாளரை தீர்மாணிக்க பெனால்டி உதை வழங்கப்பட்டது. இதில் முதல் உதையை பிரான்ஸ் சார்பில் டெம்பேலே கோலாக மாற்றினார். அடுத்து போர்த்துக்கல் சார்பில் ரொனால்டோ முதல் உதையை கம்பம் அனுப்ப 1:1 என சமநிலை பெற்றது. பின்னர் 2ஈவது மற்றும் 3ஆது உதைகளை பிரான்ஸ் அணியின் யௌச்சப் மற்றும் ஜ"லஸ் கவுண்டே ஆகியோர் கோலாக்கினர். இருப்பினும் போர்த்துக்கல் சார்பில் 2ஆவது உதையை சில்வா கோலாக்க 3ஆவது உதையை ஜாவெல் பெலிக்ஸ் வீணடிக்க 3:2 என முன்னிலை பெற்றது பிரான்ஸ்.

பின்னர் மிகுதி இரு உதைகளையும் பிரான்ஸ் அணி கோலாக்க 4ஆது உதையை போர்த்துக்கல் அணி கோலாக மாற்றிய போதிலும் 5:3 என்ற பெனால்ட்டி கோல்களின் அடிப்படையில் வெற்றி பெற்ற பிரான்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்குள் நுழைந்தது. இப் போட்டியில் ஏற்பட்ட தோல்வியால் தொடரிலிருந்து வெளியேறியது போர்த்துக்கல் அணி. மேலும் இந்தப் போட்டியே பெரும்பாலும் போர்த்துக்கல் அணியின் 41 வயதான பெபே மற்றும் 39 யதான கிறிஸ்டியானோ ஆகியோருக்கு போர்த்துக்கல் அணிக்காக விளையாடும் இறுதிப் போட்டியாக இருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இப் பத்திரிகையானது (மின்னிதழ்) Moon Media Network நிறுவனத்தினால் 41/2, விஜித வீதி, நதிமால, தெஹிவளை எனும் முகவரியில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.